[illegible]

V 2. No 3

March 1929


3L

R673[illegible]28

1929.2.3.

187129

127 ...ered No. M. 2330.

"SIDDHANTHAM"
Vol. 2—No. 3.

OFFICE OF THE REGISTRAR OF ...
No.——
5 APR 1929

ஓம்

# சித்தாந்தம்

சைவசித்தாந்த மகாசமாஜத் திங்கள் வெளியீடு

"எல்லாரும் இன்புற் றிருக்க நினைப்பதுவே
அல்லாமல் வேறொன் றறியேன் பராபரமே"



| | | |
|---|---|---|
| மலர் உ | விபவ ஆண்டு பங்குனித் திங்கள்<br>1929 ஹு மார்ச் மீ | இதழ் ௩ |



உள்ளுறை — பக்கம்


| உள்ளுறை | பக்கம் |
|---|---|
| சமய வளர்ச்சி ... ... ... | 53 |
| ஒரு பெண்மணியின் தினசரிக் குறிப்புப் புத்தகம் ... | 57 |
| சமய உணர்வும் ஆராய்ச்சி யறிவும் ... ... | 62 |
| சிவமும் சத்தியும் ... ... ... | 65 |
| மதிப்புரைகள் ... ... ... | 68 |
| உற்ளூர் யாருளர்? ... ... ... | 69 |
| சைவ மகாநாடு கூடுங்காலத்து நடத்த வேண்டுவன வற்றிற்குரிய கருத்துக்கள் ... ... | 73 |


ஆசிரியர் :—ம. பாலசுப்ரஹ்மண்ய முதலியார், B. A., B. L.

உதவி ஆசிரியர் :—வல்லை. பாலசுப்பிரமணியன், B. A.

சைவ சித்தாந்த மகாசமாஜம்,
சென்னை.

1929

சிவமயம்

# சைவப் பெரியார் தனிக்கூட்டம்

இக்கூட்டம் 1929௵ மார்ச்சு௴ 29, 30, 31-ம் தேதிகளில் திருநெல்வேலி டவுன் கணபதி விலாச கொட்டகையில் அடியிற் காணும் சபைகளின் சார்பில் சைவத் திருவாளர் ச. சச்சிதாநந்தம் பிள்ளை B. A., L. T., அவர்கள் தலைமையில் நடைபெறும். இவ்வறிக்கையைக் கண்ணுறும் ஒவ்வொருவரும் சென்ற இதழில் குறிக்கப்பட்டுள்ள கேள்விகளை நன்காய்ந்து அவைகட்குரிய விடைகளைச் செப்பனிட்டு, எழுதி கூட்டத்துக்குக் கொண்டுவருவதோடு தங்கள் நண்பர்களையும் தங்களுக்குத் தெரிந்த அறிஞர்களையும் அவ்வாறு செய்யும்படித் தூண்டி அவர்களையும் கூட்டத்துக்கு அழைத்து வரும்படி விரும்புகிறோம். சைவச் சார்புடைய எல்லா சபைகளும் அதுபோலவே செய்து பிரதிநிதிகளைத் தேர்ந்து அனுப்பிக் கூட்டத்துக்கு உதவி புரிதல் மிகச் சிறந்தது. சைவர்களேயன்றி சைவப் பற்றுடையார் எவரேனும் இக்கூட்டத்துக்கு வரலாம்.

## நிகழ்ச்சி முறை

| | | | |
|---|---|---|---|
| 29-3-1929 | மாலை | 2- — 2-30 | கடவுள் வணக்கம், தலைவர் வரவேற்பு. |
| | | 2-30— 3-30 | தலைவர் முன்னுரை. |
| | | 3-30— 6-30 | சீர்திருத்த முறைகளைப் பற்றி ஆலோசனை. |
| 30-3-1929 | காலை | 8 —11 | தீர்மானங்கள். |
| | மாலை | 3 — 7 | ஆலோசனை, தீர்மானங்கள். |
| 31-3-1929 | காலை | 8 —11 | தீர்மானங்கள். |
| | மாலை | 3 — 6 | ஆலோசனை, தீர்மானங்கள். |
| | | 6 — 7 | தலைவர் முடிபுரை. |

இங்ஙனம் :

சைவ சித்தாந்த மகா சமாஜம்.
தென்னிந்திய சைவ சித்தாந்த சங்கம்.
பாளையங்கோட்டை சைவ சபை.
தூத்துக்குடி சைவ சித்தாந்த சபை.

5 APR 1929 MADRAS

ஓம்

# சித்தாந்தம்

"எல்லாரும் இன்புற் றிருக்க நினைப்பதுவே
அல்லாமல் வேறொன் றறியேன் பராபரமே"


| மலர் ௨ | விபவ ஆண்டு பங்குனித் திங்கள்<br>1929 ௵ மார்ச்௴ | இதழ் ௫ |
|---|---|---|


## சமய வளர்ச்சி

[பத்திராசிரியர்]

உலகத்திலுள்ள எல்லாப் பொருள்களைப் போலவே சமயமும் கூர்தல் அல்லது விகாசமுறை (Evolution) பற்றி வளரும் பொருளென ஆராய்ச்சி வல்லுனர் கூறுகின்றனர். வைதிகக் கொள்கையுடையோர் (Orthodox) சமயம் கடவுளால் வெளியிடப்பட்டது; (Revelation) அதற்கு வளர்ச்சிமுறையொன்றும் கிடையாது எனக் கூறுவர். அறிவியல் வல்லுனர் (Scientists) ஏனைய பொருள்களைப் போல சமயம் கூர்தல் முறைபற்றி வளர்ந்ததற்குச் சான்றுகள் கிடையாவென மொழிவர். சரித்திரத்தை நோக்குழி, முதலில் சமயம் கடவுளால் வெளியிடப்பட்ட முதல் நூல் ஒன்று பற்றித் தொடங்கினும், ஒவ்வொரு நாட்டிலும் ஏனைய சமூக ஏற்பாடுகளைப் போலவே வளரும் குறிகளை அவ்வப்போது காட்டி வருகிறது என்று எளிதில் உணரலாம். யாக்கையிலுள்ள பல பகுதிகள் (Organisms) எவ்வாறு கூர்ந்து வளருகின்றனவோ, பொதுவாக அஃதேபோல் சமூக வாழ்வில் பலவகைச் சிக்கும் வேற்றுமையும் உடைய சுற்றுப் பொருள்களுக்கு (Environments) ஏற்றவாறு கூர்ந்து வெளியாகி வாழ்க்கையில் தொழிற்படும் பொருள்களுள் சமயம் ஒன்றென சரித்திர வாயிலாக உணரலாம். ஆகவே சமயமும் கூர்தல் முறையில் வளர்வது திண்ணம். இவ்வளர்ச்சியை (1) சமயத்தின் தன்மை (2) சுற்றுப் பொருள்கட்கேற்ற வளர்ச்சி (3) வளர்ச்சியில் கீழ்ப்படியிலுள்ள சில இலக்கணங்கள் மேல்படியிலும் ஒட்டி நிற்றல் (4) பல சமயங்களுக்குள் சமூகத்துக்குச் சாலப் பொருத்தமுடையது மட்டும் உயிருடன் இருப்பதற்கான போர் என்ற நான்கு பகுதிகளாக்கிச் சற்று ஆராய்வாம். இவ்வாராய்ச்சிக்கு ஆசிரியர்

ஷேய்லர் மாத்தியூஸ் இயற்றிய "சமயத்துக்கு அறிவியல் துணை" (Contributions of Science to Religion) என்ற நூலில் பதினைந்தாவது அதிகாரம் பெரிதும் துணை செய்வதாகும்.

1. சமயத்தின் தன்மை :— மக்களுக்குத் தற்பாதுகாப்பு, காமம் முதலிய இயற்கையுணர்ச்சிகளைப்(Instincts of self preservation and of sex) போலவே, தங்கள் வாழ்க்கையின் ஒரு பகுதியாக சமய உணர்ச்சியும் இருக்கிறது. உலகத்திலுள்ள தனக்கு மீறிய பெரிய சக்தியைத் தனக்குத் துணை புரியும் உறவில் வைத்துக் கொண்டு தனக்குத் துணை செய்வோரிடத்துத் தான் ஒழுகுவதுபோல் அச்சக்தியிடத்தும் அறிவுடன் மனிதன் ஒழுகும் முயற்சியே சமயக்கிருமி (Simplest religious organism) என்று கூறலாம். தாழ்ந்த சமய வுணர்ச்சிக்கு, மனிதனைப் போல் உறுப்புக்களையுடைய பெரிய பொருள் உண்டென்பதில் நம்பிக்கை தேவையில்லை. ஆனால் எவ்வகைச் சமயமும் சுற்றுப் பொருள்களை மக்களைப் போல் கண்டொழுகும் இயற்கையுடையது. (Environment is personified) சமய வுணர்ச்சியில் இத்தகைய மனப்பான்மைக்குக் காரணம் பலவாறு கூறப்பட்டிருக்கிறது. பயம், கனவு, இறந்தோரச்சம் முதலிய பல காரணங்கள் மக்களுருக் கோடல் (Anthropomorphism) என்னும் இம் மனப்பான்மைக்குக் கூறப்பட்டுள்ளன. தோற்றத்தில் இவ்வாறு காணும் சமயக்கிருமி பின்னர் எவ்வாறு நிலைத்து வளர்கின்றது என்பதைச் சிறிது ஆராய்வோம்.

2. சுற்றுப் பொருள்கட் கேற்ற வளர்ச்சி :— இவ்வகை வளர்ச்சி கூர்தல் முறைக்குச் சிறந்ததொரு இலக்கணம். முதல் முதலாக நிலம், நீர், தீ, வளி, வான், ஞாயிறு, திங்கள் முதலிய இயற்கைப் பொருள்கள் மக்களுருக்கோடல் என்ற மனப்பான்மைக் கேற்றவாறு கடவுளாகத் தொழப்பெற்றன. மக்களைப்போல் முதலில் தொழப்பட்ட இச்சக்திகள் பின்னர் மக்களுருவாகவே கருதப்பட்டு, மக்கள் வகுப்பாக (Tribes) வாழத் தொடங்கிய காலத்து வகுப்புத் தலைமை வகிக்கும் தெய்வங்களாகக் கொள்ளப்பட்டன. பிறகு வகுப்பு நன்மை தீமைகளைத் தரும் ஆற்றலுடையனவாய்ப் பலி முதலியவைகளை ஏற்கும் கடவுளராக வளர்ந்தன. பின்னர் வகுப்புகட்குள் சண்டைகள் நேர்ந்தபோது வகுப்புக் கடவுள் (Tribal God) பல வகுப்பினரை வென்று அடக்கியாளும் அரசக் கடவுளாகவும் (Monarchical God) விதி, விலக்கு முதலியவைகளை நிறுவி நீதி செலுத்தித் தண்டிக்கும் நீதிபதியாகவும் சமூக நாகரிக வளர்ச்சிக்கிசைந்தவாறு கருதப்பட்டு வந்தனர்.

இந்தப் படியிலே தான் உலகத்திலே நிலைத்துள்ள பெரிய சமயங்களெல்லாம் இருவகை இலக்கணங்களை மேற்கொண்டன. முதலாவதாக, பலவகைச் சிறு தெய்வங்களையும் கைவிடாது வைத்துக் கொண்டு அவைகளுக்கு மேற்பட்ட பெருந்தெய்வம் ஒன்றுகக் கடவுளைக் கருதல்-அதாவது பல கடவுளர் ஒரு கடவுள் ஆகிய இரண்டின் உண்மையும் ஒருங்கே பொருந்த வைத்தல் (Genuine mono-theism in polytheism); இரண்டாவதாகக் கடவுளை அறவாழி அந்தணனுகக் கருதி அறத்துறையில் மக்கள் முன்னேற்றத்திற் கேற்றவாறு கடவுளுக்கு இலக்கணம் கூறுதல். இக்கருத்துக்

187129



களைச் சில சமயங்கள் கடவுள் உலகத்துக்குள் ஊடுருவி நின்று (Immanent) இயங்குவதாகவும் வேறு சில சமயங்கள் கடவுள் உலகத்துக்குப் புறம்பாக நின்று தோற்பாவையைக் கயிறு கொண்டு ஆட்டுவது போல் (Transcendental) ஆட்டி வைப்பதாகவும் கூறுகின்றன.

ஆகவே, இதுகாறும் கூறியவற்றை உற்று நோக்கில் முதலில் இயற்கைச் சக்தி வழிபாடே (Pantheism) பின்னர் மக்களுருக்கோடல் முறைபற்றி (Anthropomophism) மாறி விட்டது என்று பொதுவாகக் கண்டோம். இப்போது அறிவியல் துறையில் ஆராய்ச்சி முதிர்ந்ததின் பலனுக மீண்டும் இயற்கைச் சக்திகளின் மேன்மையும் முழுமையும் வலியுறுத்தப்பட்டு வருகின்றன. எனவே, தொடக்கத்தில் இயற்கையை அறியாமையால் அச்சத்தோடு வழிபட்ட மக்கள் முழு அறிவுகொண்டு அதன் பெருமையை யுணர்ந்து மீண்டும் வியந்து வழிபடத் தொடங்கி வருகிறார்கள். இவ்வாறு வழிபடும் பேரறிஞரிடை இருவகைக் கருத்துக்கள் நிலவி வருகின்றன. ஒரு சாரார் அறிவியல் துணை கொண்டு எம்மட்டில் இயற்கை விதிகளை அறிந்த போதிலும் இயற்கையின் தன்மையை யறிதல் இயலாது என்று கூறி மக்கள் மனம் போன்ற மனமுடைய பெரிய பொருள் ஒன்று இயற்கையை நடத்தி வருகிறது என்றே மக்களுருக்கோடல் முறையை மீண்டும் வலியுறுத்துகிறார்கள். மற்றொரு சாரார் இயற்கை விதிகளுக்குப் பொதுவிலக்கணமாகக் காணப்படும் கூர்தல் முறையிலேயே உயரிய நோக்கம் பொதிந்து நிற்கிறதென்று (Purposive Evolution) கூறுகின்றனர். இந்நிலையில் அறிவியலை சமயத்தோடு பொருத்தி யுணரும் பேரறிஞர் மனப்பான்மை நிற்கிறது.

3. கீழ்ப்படிக் குறிகள் மேற்படியில் ஒட்டி நிற்றல்:—இது பொதுவாகக் கூர்தல் முறையில் பொதுவாகக் காணக்கூடிய உண்மை. மக்கள் யாக்கையிலும் அவ்வாறு சில பகுதிகள் இருப்பது உடற்கூறு நூல்வல்லுனருக்கு நன்றாய்த் தெரிந்ததொன்று. பலவகைச் சடங்குகள் பெரிதும் உருமாறி புதிய காரணங்களோடு நிலைபெற்றிருத்தலை ஒவ்வொரு சமயத்திலும் எளிதில் இற்றைவரை காணலாகும். ஏனைய பொருள்களைப் போலவே சமயமும் பலவகைத் தாபனங்களின்றி (Institutions) நிலைபெற்றிருக்கமுடியாது. பலவகை அரசியற்றாபனங்களின்றி ஒரு நாட்டு அரசு எவ்வாறு நடக்கும்? அஃதேபோல் மருத்துவம், வணிகம் முதலிய ஒவ்வொரு துறையிலும் காணலாம். மக்களை ஒரு துறையில் சேர்த்து அவர்கட்கு நன்மை பயக்குவது அத்துறையிலுள்ள தாபனங்களே யன்றோ? எவ்வகைத் தாபனங்களும் கட்டுப்பாடும் விதிவிலக்குகளும் வேண்டாம் என்ற கொள்கையுடையோருங்கூட (Nihilists) தங்கள் கொள்கைகளைப் பரப்புவதற்காகக் கழகம், பத்திரிகை, சொற்பெருக்கு மேடை முதலிய தாபனங்களை வைத்தே வேலை செய்ய இயலும். ஆகவே சமயத் துறையிலும் தாபனங்களை வைத்துக்கொண்டுதான் வேலை செய்ய வேண்டும். தாபனங்களின்றேல், ஒரு பொருளின் இலக்கணங்கள் நூலளவில் விளங்குமேயன்றி அதன் இலக்கியம் மக்களிடை விளங்க எவ்வாற்றானும் இயலாது. சரித்திரத்தை நோக்கும் போது ஒவ்வொரு துறையிலும் காலத்துக்கேற்றவாறு தாபனங்கள் தோன்றி

"அருமை அன்பரே,

நீவிர் பற்பலருக்கு விடுத்த கடிதங்கள் அவர்களுக்கெல்லாம் நல்ல பயிற்சியைத் தந்தது. நீர் கூறியபடியே என்னால் ஒல்லும் வகை முயன்று ஒரு சில நாட்களின் தினசரிக் குறிப்புகளை எழுதி இத்துடன் அடக்கம் செய்திருக்கிறேன். என்னுடன் நீவிர் இளமை தொட்டே பழகியவராதலால், என் பிறப்பு, வளர்ப்பு முதலிய வெல்லாம் உமக்கு நன்றாகத் தெரியும். எனக்கு இப்போது வயது இருபத்தொன்று என்றும், சென்னையில் நடுத்தர அந்தஸ்துள்ள ஒருவரை மணந்து வாழ்கிறேனென்றும், என்னைப்பற்றி உமக்கு அதிகமாகத் தெரிந்தால் போதும். துலுக்காணம் என்னும் ஒரு சமையற்காரி எங்களிடத்தில் இருக்கிறாள். உமது கடிதம் கிடைத்த அன்று தொட்டே யான் நாடோறும் செய்வனவற்றை ஒரு புத்தகத்தில் குறித்துக் கொண்டு வந்தேன். அவை வருமாறு:

செவ்வாய்க்கிழமை: இரவு: காலை ஒரு மணி வரையில் எனக்குத் தூக்கம் வரவில்லை. உமது கடிதத்திற்கு எவ்வாறு பதில் எழுதுவதென்று நினைத்துக் கொண்டிருந்தேன்.

புதன்கிழமை: காலை எட்டு மணிக்குப் படுக்கையைவிட்டு எழுந்தேன். ஒன்பதிற்குள் துலுக்காணம் சமையல் செய்து விட்டாள். ஒன்பதரைக் கெல்லாம் எனது கணவனார் சோறுண்டு தமது காரியாலயத்திற்கு மிகவும் அவசரமாக ஓடிப்போனார்.

ஒன்பதரையிலிருந்து பன்னிரண்டு வரை: யான் நீராடிவிட்டு உணவு உட்கொண்டேன்.

பன்னிரண்டி லிருந்து பிற்பகல் நான்கு வரை : எனது கணவனாருடைய தமக்கையின் மகனுக்குப் பெண்பார்த்த இடம் சாதி குலம் போதாதென்றும், அவ்விடத்தில் பெண் கொள்ளக்கூடாதென்றும் எனது மாமியார் முதலியோரிடம் வாதாடினேன்.

நான்கிலிருந்து ஆறு வரை : பொங்கல் புதுநாள் வருவதை முன்னிட்டு எனது தாய் வீட்டார் எனக்குப் பரிசளித்த ரவை தோடு ஒன்றைப் போட்டுக் கண்ணாடியில் அழகு பார்த்துக் கொண்டிருந்தேன். ஆ! யான் உண்மையிலேயே மிகவும் எழிலோடு விளங்குகிறேன். என்ன வென்றாலும் எதிர் வீட்டிலிருக்கும் பத்மாவதிக்கு அவள் கணவன் வாங்கிக் கொடுத்த காதணியைப்போல் என்னுடையது அவ்வளவு விலையுயர்ந்ததும், ஒளி யுடையதும் அன்று. என் மனம் வெதும்புகின்றது; கண்களில் நீர் ததும்புகின்றது.

ஆறிலிருந்து ஒன்பது வரை : சாப்பிட்டு விட்டு, கணவருடன் எனது ஆபரணத்தின் இழிவைப் பற்றி முறையிட்டுக் கொண்டிருந்தேன்.

ஒன்பது : படுக்கைக்குச் சென்றேன்.

இரவு : கணவனாருடன் கடைக்குப் போய் மிகவும் விலையுயர்ந்த வைரத் தோடு வாங்குவதாகவும், அணிந்து மகிழ்ச்சி யடைந்ததாகவும் கனவு கண்டேன்.

வியாழக்கிழமை : இன்று எங்கள் வீட்டில் முனீசுவரனுக்குப் பூசை போட்டார்கள். சென்ற ஆண்டு எனது கணவன் மீளா நோய்வாய்ப்பட்டபோது எனது மாமியார் தமது மகனுக்கு நோய் தீர்ந்தால் பூசை போடுவதாகப் பிரார்த்தனை செய்து கொண்டார்கள். இன்றெல்லாம் எங்கள் வீட்டில் முழுகலும், கழுவலுமாக இருக்கின்றது. ஓயாத வேலை; பம்பரம்போல் நான் ஒருத்தியே சுழல்கிறேன். இன்று நடந்த சடங்குகளையும், பூசைகளையும், ஆடு கோழிகள் பலியிட்டதையும், ஒவ்வொன்றாகச் சொல்லி வந்தால், உமக்கு மனச்சலிப்பையும் வெறுப்பையும் தருமென்று அஞ்சி கூறாது விடுக்கின்றேன்.

பிற்பகல் மூன்று மணிக்குச் சாப்பாடு; அகால போஜனம்; கண்களில் பொங்கலிட்ட புகைஅப்பிக்கொண்டது. இரவு ஏழுமணிக் கெல்லாம் பொறுக்க முடியாத தலைநோயும், கண்களில் நீர் வடிதலும், எரிச்சலும் ஆரம்பித்து விட்டன. எனினும், வேலை நின்றபாடில்லை. இரவு பத்துமணிக்கு என்னையுமறியாமல் கட்டாந்தரையிற் சாய்ந்து விட்டேன்.

வெள்ளிக்கிழமை : இன்று பொதுவாக இந்தியப் பெண்களுக்கு விரத நாள் ;

பத்தரை மணிவரை : வீடெல்லாம் கழுவினேன் ; வாசற் படிகளைக் கழுவி மஞ்சட் குங்குமம் பூசினேன் ; பெரிய பெரிய கோலங்கள் போட்டேன்; பூசை விளக்குகளைத் துலக்கினேன்.

பத்தரையி லிருந்து பன்னிரண்டு வரை : இராகு காலம், ஒன்றும் செய்யவில்லை.

பன்னிரண்டிலிருந்து இரண்டு : எண்ணெயிட்டு நீராடி விளக்குப் பூசை.

இரண்டிலிருந்து மூன்று : உணவு.

மூன்றிலிருந்து நாலரை : சிறு துயில்.

நாலரையிலிருந்து ஆறு : வெள்ளிக் கிழமைகளில் வழக்கம் போல் மாரியம்மன் கோயிலுக்குப்போக ஆயத்தம் செய்து கொண்டேன். புதிதாய் வாங்கின புடைவையை அன்று கட்டிக் கொண்டேன்.

ஆறிலிருந்து எட்டு: கோயிலுக்குப் போனேன். மற்றப் பெண்களெல்லாம் யான் புதிதாய்க் கட்டியிருக்கும் புடைவையைக் கண்டு அதிசயித்து என்ன விலையென்றும், எங்கே வாங்கினாயென்றும் இடைவிடாது கேட்டுக் கொண்டேயிருந்தார்கள். கோயிலில் கூட்டம் சொல்ல முடியாது. மூச்சுத் திணறுகின்றது. யான் நெருக்குண்டதற்கு அளவேயில்லை. ஆ! என்ன? ஒருகால் இலேசாக இருக்கின்றது ; இப்போது தெரிகின்றது ; இடது கால் வெள்ளிக் கொலுசு திருகாணி கழன்று வீழ்ந்து விட்டது. கணவற்கு இது தெரிந்தால் சீற்ற முறுவரென்று அஞ்சினேன் ; வாடிய முகத்துடன் வீடு சென்றேன். ஆண்டு உற்றிருந்த எனது அன்னையார் எனது வாடிய முகத்தைக் கண்டு, புதிதாய்க் கட்டிக்கொண்டு போன சேலையால் திருஷ்டி பட்டதென்று கருதிக் கண்ணேறு கழித்தார்கள். உண்மையறிந்த எனது கணவனார் அன்றிரவெல்லாம் என்மீது சிடுசிடுவென்றே இருந்தார்.

எட்டிலிருந்து பத்து : நல்ல நாளில் ஆபரணத்தைத் தொலைத்ததற்காக அழுத கண்ணும் சிந்திய மூக்குமாக இருந்தேன்.

பத்து : உறக்கம்.

சனிக்கிழமை : இன்றைக்கு என்னால் ஒன்றும் செய்ய முடியவில்லை. சென்ற இரண்டு நாட்களில் பட்ட அலுப்பு உடம்பெல்லாம் நோக்காடாயிருக்கின்றது. விழித்துக் கொண்டிருந்

தும் படுக்கையிலேயே புரண்டுகொண்டிருந்தேன்.

ஞாயிற்றுக்கிழமை : இன்று விடுமுறை நாளானதால் கணவனுர் வீட்டிலேயே இருக்கின்ருர்.

எட்டு : படுக்கையை விட்டெழுந்தேன்.

எட்டிலிருந்து பன்னிரண்டு : சமையல் தயாரித்துக் கொண்டிருந்தேன்.

பன்னிரண்டிலிருந்து ஒன்று : போஜனம்.

ஒன்றிலிருந்து நான்கு : இன்று மாலை சென்னை பீபில்ஸ்பார்க் மைதானத்தில் * சுகாதார வாரமும், குழந்தை வாரமும் கொண்டாடுகிருர்களென்று கேள்வியுற்று ஆண்டுப்போக என்னை அலங்கரித்துக்கொண்டிருந்தேன்.

நாலே கால் : எல்லாம் சரியாய் விட்டது. ஆனுல் கழுத்திற்கு மட்டும் தங்கச் சங்கிலி இருந்தால் நல்லதென்று தோன்றியது. கணவனுர் அவசரப்படுத்துகிருர். அடுத்த தெருவிலிருக்கும், எனது கணவருடைய நண்பரின் மனைவி காமாட்சி யிடமிருந்து அவளுடைய தங்கச் சங்கிலியை இரவல் வாங்கி வரும்படித் துலுக்காணத்தை அனுப்பினேன்.

நாலரை : துலுக்காணம் இன்னும் வரவில்லை. ஆ ! அதோ வருகிருள். சே ! வந்தும் என்ன பயன் ? இராகு காலம் வந்துவிட்டது. இனிப் போக முடியாது. மூன்று மணி நேரங்களாக அணிந்த ஆடை யணிகலன்களை அவிழ்த்து வைத்துவிட்டு சமயலறைக்குச் சென்றேன். கணவர், பெருஞ் சீற்றத்துடன் தனியே வெளிக்கிளம்பிப் போய்விட்டார்.

நாலே முக்காலிலிருந்து எட்டு: எதிர் வீட்டுப் பத்மாவதி நல்லதங்காள் கதையைப் படிக்க யான் உறங்கிக் கொண்டே கேட்டுக் கொண்டிருந்தேன்

எட்டிலிருந்து பத்து : சாப்பிட்டுவிட்டுப் படுக்கைக்குச் சென்றேன்.

திங்கட்கிழமை : ஆறு மணிக்குப் படுக்கையை விட்டெழுந்தேன். துலுக்காணம் சமையல் செய்து கொண்டிருந்தாள். எனது கணவர் காலையில் செய்ய வேண்டுவன வற்றைச் செய்துவிட்டு உணவு உட்கொண்டு தமது காரியாலயத்திற்குப் போக மிகவும் அவசரமாகப் புறப்பட்டார். அப்போது கணவனை யிழந்த விதவையான துலுக்காணம், எங்கேயோ கடைக்குப் போயிருந்து எதிரே வந்தாள். அது பொல்லாத சகுனமாகையால், அந்த அவசரத்தில் எனது கணவர் சற்று வீட்டில் தங்கிப் போக வேண்டியதாயிருந்தது. சரியாகப் பத்துமணிக்குக் காரியாலயத்தில் இருக்க வேண்டியவர் இன்று வீட்டிலிருந்தே பத்திற்குத்தான் புறப்பட்டார். அன்று மேலதிகாரி, நேரம் கழித்து வந்ததற்காக எனது கணவர் மேல் சீறி விழுந்தாராம்.

பத்திலிருந்து பன்னிரண்டு: சற்றும் ஆலோசியாமல் எனது கணவர் குறுக்கே வந்ததற்காகத் துலுக்காணத்தை வைதுகொண்டிருந்தேன். என்னுடைய வசை மொழிகளைப் பொறுக்க மாட்டாமல் அவள் வேலையைவிட்டு நீங்கி விடுவதாகச் சொல்லிச் சரேலெனப் போய்விட்டாள்.

நண்பகல் : உணவு.

* Health and Baby Weeks.



ஒன்று : விழுப்புரத்தி லிருக்கும் எனது தந்தையா ரிடமிருந்து தந்திச் செய்தி ஒன்று வந்தது. எனக்கு ஆங்கிலம் தெரியாது. என்ன அபாயமோ, என்ன செய்தியோ என்று அரைமணி நேரமாக அலைந்து, அப்போது தான் பாடசாலையி லிருந்து வீட்டிற் கேகும் ஒரு பிள்ளையை விளித்து அதைப்படிக்கச் சொன்னேன். அதில், எனது கணவருக்கு நல்ல ஊதியத்தைத் தரும் ஒரு வேலை இருக்கிற தென்றும், அன்றிரவே புறப்பட்டு வரும்படியும் கண்டிருந்தது. யான் அடங்கா மகிழ்ச்சி கொண்டேன்.

இரண்டு : பொங்கல் இனும் வாங்குவதற்காக எங்கள் வீட்டு ஜோஸியர் வந்தார். அவருக்குத் தக்க சன்மானம் செய்த பிறகு, தந்திச் செய்தியைப் பற்றி அவருக்குச் சொல்லி, இன்றிரவு விழுப்புரத்திற்குப் போகலாமா என்று கேட்டேன். அதற்கு, அவர் " இன்று எமகண்டம் ; மேலும் தெற்கே வாரசூலை ; ஆயிரம் வருவதானுலும் போகக் கூடாது" என்ருர். எனக்கு அப்போதே தெரியும். காலையில் அந்த சமையற்காரி எதிரே வந்தாள். அதனுல்தான் இவை யெல்லாம் வந்து விளைந்தன.

நான்கு : நல்லதங்காள் கதையில் சில வரிகள் படித்தேன்.

ஐந்து : துலுக்காணம் போய் விட்டபடியால் வீட்டு வேலைகளை நானே செய்ய வேண்டியதா யிருந்தது. என்னை அலங்கரித்துக் கொள்ளவும் நேரமில்லை.

ஆறு : கணவர் வீட்டிற்கு வந்தார். தந்திச் செய்தியைப் பார்த்தார். விழுப்புரத்திற்கு அவர் போக வேண்டுமென்று எவ்வளவோ வற்புறுத்தியும், போகக் கூடாதென்று நான் மன்ருடினேன். இறுதியில் பயணம் நின்றுவிட்டது.

ஏழு : கணவர் சாப்பிட்டுவிட்டு உற்சாக மின்றி உட்கார்ந்து கொண்டிருக்கிருர்.

இரவு எட்டிலிருந்து ஒன்பது : அவரை மகிழ்வித்து, ஒற்றை வாடைக் கொட்டகையில் " சதாரம் " நாடகத்திற்கு அழைத்துக் கொண்டு போகச் சொன்னேன்.

ஒன்பதரையிலிருந்து காலை நான்கு : நாடகக் கொட்டகை ; திருடன் வேஷம் நன்ருக இருந்தது. திருடனுக்குச் சரியாக சதாரம் சவால் கொடுத்தது மிகவும் வேடிக்கையாக இருக்கின்றது. நடிகர்களில் சிலர் வழங்கிய இழி சொற்களும், அவைகளை மேலும் மேலும் சொல்லும்படி நாடகம் பார்க்க வந்த கீழ்மக்கள் சீழ்க்கையினுலும், கைதட்டலினுலும் உற்சாகப்படுத்தியதும் எனக்கு முற்றும் வெறுப்பைத் தந்தது.

நாலரை : வீட்டிற்கு வந்து படுத்துறங்கி விட்டோம்.

" அருமை அன்பரே இந்த நாட்களில் யான் செய்த வேலைகளை எண்ணிப் பார்த்தால் அவை பயன் தரக் கூடியனவோ, அல்லது வீணுகக் கழிக்கப்பட்டனவோ என்று எனக்குச் சந்தேகமாக இருக்கின்றது. உமது கடிதம் எனக்குக் கிடைத்து, அதன்படி எனது தினசரிக் குறிப்புகளை எழுதுவதற்கு முன்பு, யான் என்னுடைய காலத்தை இவ்வளவு மோசமாகக் கழிக்கின்றேன் என்று தோன்றவில்லை எங்கள் கட்டிலின் மேல் பரப்புவதற்கு, பூவேலை செய்தது துப்பட்டி ஒன்றை நூலினுல் பின்னியது தவிர, வேறொன்றும் உபயோகப்

படக்கூடியதாக இந்த ஏழு நாட்களில் செய்ததாகத் தெரியவில்லை. இனியாகினும் எனது வாழ்நாள் செம்மையுறும் என்று நம்புகிறேன். அது தங்களது புண்ணியம் என்றே சொல்வேன். நீவிர் அடிக்கடி இதுபோன்ற கடிதங்கள் எழுதிக்கொண்டே இருத்தல் வேண்டும்.

இங்ஙனம்:
உமது அன்புள்ள,
காந்திமதி.

யாம் மேற்சென்று ஒன்றும் கூற வேண்டுவதில்லை. இந்த ஏழு நாட்களைக் கழித்ததுபோல, தமது வாழ்நாள் முழுமையும் இம்மாதரார் கழித்து விட்டால் அஃது எத்துணை பயங்கரமாயிருக்குமென்று, அன்பர்களே, நீங்களே நினைத்துப் பார்மின்கள். இவ்வம்மையாருக்கு எமது மனமார்ந்த நன்றியறிதலைச் செலுத்துதலோடு, இக்கட்டுரையை முடிக்கின்றோம்.

"பொன்னே கொடுத்தும்
புணர்தற் கரியாரைக்
கொன்னே தலைக்கூடப்
பெற்றிருந்தும்—அன்னோ
பயனில் பொழுதாய்க்
கழிப்பரே நல்ல
நயமில் அறிவி
னவர்"—நாலடியார்.

[இது, பதினேழாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் இங்கிலாந்து நாட்டில் பெரும் புலவராக விளங்கிய அடிஸன் துரை மகனார் (Joseph Addison) ஆங்கிலத்தில் எழுதிய கட்டுரையைத் தழுவி எழுதப்பட்டது.]

---

# சமய உணர்வும் ஆராய்ச்சி யறிவும்

[காழி. சிவ. கண்ணுசாமி B. A.]

ஒவ்வொரு சமயமும் வீறு பெற்றோங்கி வளர்ந்து காலாந்தரங்களிற் பெருமை குறைந்து தட்டழிந்து நிற்கும் இயல்புடையதென்றும், அது காரணமாகவே பின்னர் அது புத்துயிர் கொண்டு பிறக்க முறுங் காலத்து முன்னிலுஞ் சிறந்து தோன்றி வளருமியல்புடையதென்றும், அதுவே ஒரு சமயத்தின் உயிர்ப் பண்பென்றுங் கூறினும். பண்படுத்தப் படாத நிலையிலுள்ள ஒரு சமய முதல், செவ்வே பண்படுத்தப் பட்ட நிலையிலுள்ள ஒரு சமயமும் வரையமைந்துகிடக்கும் ஒவ்வொரு சமயமும் கற்பிக்க முயல்வதென்ன? அறிவுக்கும் அளவைக்கும் பொருந்துமாறு இறைவன் தாளை எளிதிற்றலை வணங்கு நெறியுணர்த்தி ஒரு மகனது செயல்களை நல்லாற்றுப் படுத்துவிக்கும் இயல்பிற்றாய ஒரு தெய்விகத் தொடர்புண்டென்பதும் அவ்வளவில் அத்தொடர்பு தானும் மகனெனப்பட்ட ஒவ்வொருவனுக்கும் எவ்வகைத்தாய வேற்றுமையுமின்றி ஒரு படித்தாயமைந்து கிடப்பதாகும் என்பதுமே யன்றோ? பல்லுயிரும் பலவுலகும் படைத்தளித்துத் துடைக்கும் வல்லமையுடைய தாயும் சிந்தையும் மொழியுஞ் செல்லா நிலைமைத் தாயுமுள்ள ஒரு எல்லையற்ற பரம்பொருளின் அருட்டுணை கொண்டு பாழ்த்த பிறப்பறுக்கும் முடிந்த நோக்கத்துடன் அப்பரம்பொருளிடம் மகன், தோழன் அடிமை என்பன போன்ற பல முறைகளைக் கற்பித்துக் கோடலே அத்தெய்விகத் தொடர்பன்றோ? அத்தகையதோர் தொடர்பு கற்பியாத ஒரு சமயமுமுளதோ? இல்லை. அன்றியும், பிறப்பிறப்பற்றுப் பேரறிவு வாய்ந்து பேரன்பே உருவாயமைந்த இறைவன் முன்னர் மகனது உயிர் அணுவினுஞ் சிறியதோர் புன்மை யுடைத்தாகும் என்பதும் ஒவ்வொரு சமயத்தின் தேர்ந்த முடிவாகும். இறைவன், என்ற ஒன்றன்முன், அது வானேயாயினும் வளியேயாயினும், நீரேயாயினும், நெருப்பே யாயினும், மாவே யாயினும் மரமே யாயினும், தேவே யாயினும் திருவே யாயினும் மற்றெதுவே யாயினுஞ் சரியே, அவனது "தன்மைப் பிறரறியாத் தலைமைப் பெற்றி நோக்க ஒவ்வொரு மகனது உயிரும் புல்லினுங் கடையதோர் புன்மை யுடைத்தாகும் என்று பலராலும் ஒப்புக் கொள்ளப் படுதலின், மகன் எனப்பட்ட ஒவ்வொருவனும் ஏற்றத்தாழ்வற்ற சமத்துவ நிலையுடையோன் என்பது இயல்பே பெறப்படுமன்றோ? ஒப்பாரு மிக்காருமில்லாத உயர்வைப் படைத்தத் தனிப் பொருள் இறைவன் என்ற பேருயிர்; மற்றியாவும் பிறந்தும் இறந்தும் அல்லலுழப்பதாய சிற்றுயிர். இவ்வாறாக, மக்களுள் ஒருவர்க்கொருவர் பிறப்பானோ மற்றெதனானோ ஏற்றத் தாழ்வு கற்பித்துக் கொள்ளுதல் சமய நெறியாமோ? இறைவன் றன்முன் எவ்வுயிரும் சமம் என்று கொள்வதேயன்றோ உண்மைச் சமயச் சால்பு?

இனி, ஒரு நாட்டிற் பிறந்தோரும், ஒரு சமயத்திற் பிறந்தோருமாயுள்ளவர்களே நாட்டு நலனுஞ் சமயப் பிணிப்புங் கருதியேனும் சமத்துவம் பாராட்டாது, ஒன்றிற்கு முதவாத பிறப்புக் கருதித் தமக்குள் சாதி வேற்றுமை கற்பித்தும் மதவேற்றுமை கற்பித்தும் அதன் வழியே ஏற்றத் தாழ்வு உண்டெண்ணிச் சிலரை ஏத்தியும் பலரைத் தாழ்த்தியுங் கூறுதல் முறையேயோ? பிறப்பு நோக்கத் தாழ்ந்தவனென்று கொள்ளினும் இறைவனருள் பெறற்கிவனுமுரியான் என்றது கருதி மகனென்ற ஒவ்வொருவனுடனுஞ் சமத்துவம் பாராட்ட வேண்டுமென்றன்றோ பெரியார் பணித்தனர்? 'அங்கமெலாம் குறைந்தழுகு தொழு நோயராய் ஆவுரித்துத் தின்றுழலும் புலையரேனும் கங்கைவார் சடைக் கரந்தார்க் கன்பராகில் அவர் கண்டீர் நாம் வணங்கும் கடவுள'ரென்று சைவம் முழங்கிற்று. முழங்கியென்? அங்கக்குறை வேதுமின்றி நோயேதுமணுகா நல்வாழ்வு படைத்து, தன்னூன் பெருக்கற்குத் தான் பிறிதூனுண்ணாப் பெற்றியும், என்றென்றும் பத்தராய்ப் பணிந்தும், பரமனையே பாடியும், சித்தத்தைச் சிவன்பால் வைத்தும், முப்பொழுதும் முழுநீறு பூசும் மெய்யடிமைப் பண்பும் வாய்ந்த பெரியோரே யாயினும், பேருயிரான இறைவனாலன்றி மற்றைச் சிற்றுயிரிற் சிலரால் கற்பிக்கப்பட்ட சாதித்தாழ்வென்னும் ஒரு ஒழுங்கற்ற ஏது கருதி, கோயிலுக்குட் செல்லும் வசதியும், சென்றாலும், கடவுட்குறியை நெருங்கி வழிபடும் வசதியும் கிட்டாமற் றடுக்கப்பட்டுத் தட்டழிவது கண்கூடன்றோ? அவ்வாறு தடுப்பதற்கும் தடுக்கும் உரிமையை ஒரு சிலர் மேற்கொள்ளுதற்கும் எந்த உண்மைச் சமயத்தில் ஆதாரமிருக்கின்றதென யாமறியோம். உலகத்துள்ள மற்றச்சமயத்தோரெல்லாம் தஞ்சமய மேம்பாடு கருதியும் அவ்வச்சமயக் கொள்கையைப் பரப்பும்

நோக்கங்கொண்டும் பிறசமயத்தார்க்கு எல்லா உரிமைகளையும் அளித்து வந்து தஞ்சமயத்திற்கு அரண்கோலிக் கொண்டிருக்க, அளவைக்கும் அறிவிற்குமொவ்வாத சில போலி ஏதுக்களைக் கொண்டு நந்தஞ் சைவ சமயத்திலிருந்த நூறாயிரக்கணக்கான மக்களை ஒவ்வொருவராய்நெஞ் சழிந்து நீங்குமாறு செய்து நூற்றுக் கணக்கிற்குக் கொண்டுவந்த பெருமை யார்க்குரியதோ அதை இறைவனே அறிவார். இறைவன் உண்மையையும் பெருமையையும் உணர்ந்து அவன் தண்ணளி பெறுமாற்றை யெளிதில் யாவர்க்கு மெடுத்து விளக்குவான் வேண்டி யமைக்கப்பட்ட கடவுட் சின்னங் களாகிய கோயிலிலும் இலிங்கத்தின் முன்னுமே இவ்வாறு ஒரு பகுதியினர் தடுக்கப்பட்டும் ஒரு பகுதியினர் தடுக்கும் உரிமை பெற்றும் வருவாராயின், ஒரு கால் இறைவன் தன் மெய்யுருவுடன் இம்மண்ணிடை வந்தருள் செய்ய நேர்வதாக வைத்துக் கொண்டால் என்ன நடைபெறும் என்பதை எடுத்து இயம்பவும் வேண்டுமோ? இறைவன் அருளைப் பெறுதலில் பிறப்புக் கொடுமை கற்பித்தல் தமக்கும் உடன் பாடில்லை யென்பதை நம் தெய்வச் சேக்கிழார் சைவக்கொழுக் கொம்பாய குலச்சிறை யாரின்மேல் வைத்து விளக்கினரில்லையோ ?

“ குறியி னன்கு குலத்தின ராயினும்
நெறியி னக்குல நீங்கின ராயினும்
அறிவு சங்கரற் கன்ப ரெனப்பெறிற்
செறிவு றப்பணிந் தேத்திய செய்கையார்.
உலகர் கொள்ளு நலத்தின ராயினும்
அலகி றீமைய ராயினு மம்புலி
யிலகு செஞ்சடை யாரடி யாரெனிற்
றலமு றப்பணிந் தேத்துந் தகைமையார் ”

ஆகிய இவர்களே உண்மைச் சைவ நன்மக்கள் என்று விளங்கிற்றில்லையோ? எனவே இவ்வுண்மையை ஊன்றிக் குறித்து உற்றது புரிவது சித்தாந்திகளின் தலையாய கடனாகும்.

இனி உண்மைச் சமயம் என்ற ஒவ்வொன்றினது அடிப்படையான கொள்கையும் மக்கட் சமத்துவமெனில் அது முற்றுங் கடைபோகப் பின் பற்றப் படாது இடையில் வழுவ நேர்வதேனோ வெனிற் கூறுதும். இறைவனுக்கு எவ்வுயிரும் சமமே என்ற கொள்கையுடன் ஒரு புதுச்சமயம் எழுந்ததும் அச் சமத்துவத்தைக் குலைத்தால்தான் தாம் மெய் வருந்தாது பொருளீட்டலாம் என்ற துணர்ந்த ஒரு சிறு பகுதியினர் உடனே அக்கொள்கையைத் திரித்தும் மறைத்தும் விளக்கமுயலுவார். இதுவே பண்டை நாள் தொட்டு நடந்து வந்ததும் இற்றை நாள் நடை பெறுவதும் இனியும் தடுப்பேதும் இன்றேல் நடை பெறப் போவது மாகும். இவ்வாறு உண்மைப் பொருள் மறைபட்டுப் பிறழ்வுணர்ச்சி நிலைத்து விடுவதால் சமத்துவக்குலைவு கருதியோர் தாஞ் செய்வது சமய உடம்பாடு தான் என்றும் அவர்கள் சொற்கேட்டுச் சமத்துவ உரிமை யிழந்து ஏற்றத் தாழ்வு கொண்ட இழிநிலையை யொப்புக் கொண்டு வாழ்க்கையை நடத்தலே சமய வாழ்வென்று பாமரர் கருதுவதும் இயல்பாயிற்று. இதுவே சமயத்தின் வேர்ப் புழுவாகும்.

# சிவமும் சத்தியும்

[D. கோபால செட்டியார் முன் “ நியு ரிபார்மர் ” பத்திராதிபர்]

(மலர் 1, இதழ் 12, பக்கம் 283-ன் முடிவு)

இதுகாறும் சிவமும் சத்தியும் மகிழ்ந்து புணர்ந்த விஷயம் கூறினேம். இனி அப்புணர்ச்சியினால் “ உலகுயிர் எல்லா மீன்றதை ” விவரிப்பாம்.

“ காரிய காரணங்கண் முத
றுணை நிமித்தம் கண்டாம்
பாரின் மண்டிரிகை பண்ணு
மவன் முதறுணை நிமித்தந்
தேரின் மண் மாயையாகத்
திரிகை தன் சத்தியாக
வாரியன் குலாலனாய் நின்றாக்குவ
னகில மெல்லாம் ”

என்று சித்தியார் கூறும்.

கடவுள் உலகத்தைச் சிருட்டித்தார் என்பது குயவன் பாண்டத்தைச் செய்தல் போன்றது. அப்படி அவன் செய்வதும் மண்ணையும் சக்கரத்தையும் கொண்டேயாம். இவைகளில் மண் முதல் காரணமெனவும், சக்கரம் துணைக்காரணமெனவும், குயவன் நிமித்த காரணமெனவும் கூறப்படும். இம்மூன்று காரணங்களாலுமாகியது பாண்டம். இதுபோல், உலகத்திற்கு மாயை முதற்காரணமும், சத்தி துணைக்காரணமும், சிவம் நிமித்த காரணமுமாகும். இம்மூன்றால் உலகமாகிய காரிய முண்டாயிற்று. மாயையானது சுத்தமாயை, அசுத்தமாயை, பிரகிருதிமாயை என மூவகைப்படும். சுத்தமாயையும் அசுத்தமாயையும் தனித்தனி முதற் பொருள்களாம். பிரகிருதிமாயை மட்டும் அசுத்தமாயையில் காரியமானது. சுத்தமாயையில் தோன்றிய தத்துவங்கள் ஐந்து. அசுத்தமாயையில் தோன்றியவை ஏழு. பிரகிருதிமாயையில் தோன்றியவை இருபத்திநான்கு. ஆக முப்பத்தி ஆறு தத்துவங்களும் மாயா காரியங்கள். ஆகையால்,

“ மாயையே யுடல மாகு
மாயையே காண மாகும்
மாயையே புவன மாகு
மாயையே போக மாகும்
மாயையே பொறிக ளாகு
மாயையே புலன்க ளாகும்
மாயையே யண்ட பிண்டம்
யாவையு மாயை யாமே ”

என்றார் அறிஞர்.

ஆயினும் சிவமும் சத்தியும் எங்ஙனம் உலகுயிர் அனைத்தையும் ஈன்றதென்கிற விவரம் அறிதல் வேண்டும். சித்தியார் இரண்டாம் சூத்திரத்தில் இவைகள் கூறப்படினும், தற்கால ஐரோப்பிய பூத சாஸ்திரங்களை (Science) அனுசரித்து விவரம் கூறல் எளிதன்று. ஐரோப்பிய சைவ சித்தாந்தியாகிய சுவிடன்பர்க் என்பவர் தாம் இயற்றிய ஞான நூற்களில், உலகமாக விரிவுபெறத் தோன்றிய முதற் பொருள்,-சிதாகாசம், ஆகாசம், காற்று எனும் மூவகை ஆகாசங்கள் மூலமாய் அபூர்வப் பரிணாமமாய்ப் பலவிதம்மாறி, முடிவில் பூமியின் கனத்த முதற் பொருள்களாக மாறிய விதமும், காற்றுகளாகவும், ஜல பதார்த்தங்களாகவும், வன்பொருள்களாகத் தோன்றிய விவரங்களும், கடையில் விதைகளாலும், முட்டையாலும், கருப்பையாலும் தொடர்ச்சியாகப் பொருள்கள் தோன்றிய விதங்களும் நன்கு விளக்கியிருக்கின்றனர். இவை[illegible] எல்லாம் இச்

சிறு வியாசத்தில் பரக்கக் காட்டல் இயலாது. இதைக் குறித்துப் பின்னர் ஒரு தனி வியாசம் எழுதுவோம்.

மூன்றாவது அங்ஙனமிருந்தும் சிவபெருமான் பிரமசாரி, சத்தி கன்னி என்பது.

சிவமும் சத்தியும் புணர்ந்து உலகுயிரை ஈன்றிருக்க, சிவம் பிரமசாரி, சத்தி கன்னி என்பது முரணுமாலோவெனில், அவ்விதம் ஒன்றுமில்லை என்க. சத்தியும் சிவமுமாய் நின்று செய்யும் செயல்களெல்லாம் நம்மனோர் பொருட்டாக நடித்துக் காட்டும் நாடக மாத்திரையே யன்றிப் பிறிதில்லை என்பர்சிலர். வேறு சிலர், பிரம்மசாரியும் கன்னியும் போகத்தில் விருப்பமில்லாதிருப்பது போல, தனக்கென விருப்பின்றி, ஆன்மாக்களின் பொருட்டு எல்லாம் செய்தலால் சிவம் பிரமசாரி எனவும், சத்தி கன்னிகை எனவும் கூறப்பட்டது என்பர். உண்மையில், சுட்டறிவுள்ள நாம் பரமார்த்தப் பொருள்களின் கூட்டுறவுகளை எளிதிலறிதல் முடியாததாகும்.

விவாகம் மூன்று வகைப்படும். அவையாவன :— தூல விவாகம், சூக்கும விவாகம், அதிசூக்கும விவாகம். தூல விவாகம் மானிடருக்குள் நடப்பது. சூக்கும விவாகம், தேவர்களுக்குள் நடப்பது. அதிசூக்கும விவாகம் சிவத்துக்கும், சத்திக்கு முரியது. மானிட விவாகத்தின் கருத்தையே உலகிலநேகர் அறிந்திலர். அங்ஙனமிருக்க சிவம் சத்தி விவாகம் எங்ஙன மறிதற்கூடும்? அது நம் மனதுக்கு எட்டுகிறதில்லை. ஞானிகள் தான் பரமார்த்தப் பொருள்களின் உறவுகளை அறிவர். அதனால் தான் இப்பாடலில், " தவந்தரு ஞானத்தோர்க்கித் தன்மை தான் தெரியு மன்றே" என்று கூறப்பட்டது.

மூவகை விவாகங்களிலும் அன்பும் அறிவும் கூடுதல் பொதுவானது. அன்பும் அறிவும் சூக்குமப்பொருள்கள். ஆதலின் இம்மூன்று வகை விவாகங்களும் சூக்கும விவாகங்களே யாகும். மானிட விவாகத்தைத் தூல விவாகமென்று கூறியது என்னை எனின், மானிட விவாகத்தில் மேற்கண்ட சூக்குமப் பொருள்களின் ஐக்கியத்துடன் சரீரப் புணர்ச்சியும் உளதாதலா லென்க. அவ்விதத் தூலப் புணர்ச்சிகள் சூக்கும விவாகங்களில்இல்லையெனமுதலில் அறிதல்வேண்டும். காரணம் வெளிப்படையாயிருக்கின்றது. இந்நில உலகத்தில் விவாகம் மிகவு மல்கச் செய்தற்பொருட்டாகும். சூக்கும உலகத்தில் பிள்ளைபேறுக்கன்றி, உண்மையும், நன்மையும், அதாவது அறிவும், அன்பும் பரப்புவதற்காம். சூக்கும விவாகங்களில் உண்மையும் நன்மையும் நேசிக்கப்படும். மற்றவைகளைக் கவனிக்கப்படா. கணவனும் மனைவியும் புணர்தல் என்று சூக்கும உலகத்தில் புகல்வதெல்லாம் அன்பும் அறிவும் சேர்தலையே யாகும். அங்கே பிள்ளைகள் என்பது உற்பத்தியான அன்பும் அறிவுமயமாம். ஆகையால் சூக்கும உலகத்து விவாகங்கள் நிலவுலகத்து விவாகங்களைப் போன்றதன்று. சூக்கும உலகங்களில் விவாகங்கள் (Nuptials) என்று கூறமுடியாத பரமார்த்த விவாகங்களிருக்கின்றன. அவைகள் நன்மையும், உண்மையின் திருமணத்தால் உண்டாகிய ஆன்மப் புணர்ச்சிகளுமாம். ஆனால் நில உலகத்தில் அவைகள் விவாகங்களே. (Nuptials) ஏனெனில், அவை ஆன்ம சம்பந்தத்தோடு மட்டு மன்றிச் சரீர சம்பந்தமுமுடையதாயிருத்தலா லென்க. சூக்கும உலகங்களில் விவாகங்கள் (Nuptials) இலதாதலின், மணந்தஇருவர், கணவன், மனைவி என்று அங்கே கூறப்படுகிறதில்லை. ஆனால், இருமனங்களும் ஒன்றிப் பெற்ற தேவ கருத்திலிருந்து, பரஸ்பரமாய் இருவருக்கும் உரித்தாயது என்று கருத்து கொள்ளும் ஒரு மொழியால் அங்கே ஒவ்வொருவரும் அழைக்கப்படுகிறார்கள். ஆகையால் சூக்கும விவாகங்களில், அன்பும் ஞானமும் கலந்தும் கலக்காமைக்கு ஒத்திருக்கிறது. இதனால்தான் பவன் பிரமசாரியாயதும் பான்மொழி கன்னியாயது மென்க.



மனிதர்களாகிய நம்மில் இருதயத்துக்கும் சித்தத்திற்கும், சுவாசாசயங்களுக்கும், புத்திக்கும், பூரண காரண காரிய சம்பந்த மிருப்பதால், இருதயத்தினதும் சுவாசாசயங்களினதும் சேர்க்கையால் சித்தத்தையும், உணர்வால் அன்பையும் ஞானத்தால் சிவ சக்திகளின் சேர்க்கைகளைப்பற்றியும் நாம் ஒருவாறு அறிந்து கொள்ளலாம்.

இருதயமானது அதன் வலது சிரவத்தின் மூலமாய் சுவாசாசயங்களுக்குள் இரத்தத்தை அனுப்புகிறது; சுவாசாசயங்கள் அதைப் பெற்றபோது, இருதயத்தின் இடது சிரவத்தினுள்ளே இவ்விதமாய் வேறு வழியில், மறுபடியும் திருப்பி யனுப்புகிறது; இருதயமானது அதன் இடது சடாத்திலிருந்து இரத்த மூலாதாரக் குழாய் மூலமாய் சரீரத்தினுள்ளும், கழுத்திலுள்ள சுத்த இரத்த நாடிகள் மூலமாய் மூளையினுள்ளும், எல்லா திக்குகளிலும் பலமான ஊக்கத்துடன் அதைக் கொட்டுகிறது; இந்தச் சுத்த இரத்தமுள்ள நாடிகளாலும், அவைகளின் கிளைகளினாலும் இருதயத்தின் முயற்சியுள்ள பலம் சுத்த இரத்தமுள்ள நாடிகளிலிருப்பதால், இருதயமானது சரீரத்தின் சர்வ:த்திலும், அதன் முயற்சியுள்ள ஜீவசம்பந்தமுள்ள தொழில்களைச் செய்கிறது. சுத்த இரத்தமுள்ள நாடிகளிலுள்ள இரத்தம் கருத்தஇரத்தமுள்ள நாளங்களில் எல்லா திக்குகளிலும் பிறகு போகிறது. அதன் மூலமாய் இருதயத்தின் வலது சடாத்தினுள்ளாகவும், மறுபடியும் இதிலிருந்து, முன்போல அன்னி யோன்னியமாய் சுவாசாசயங்களிலும் அது மறுபடியும் திரும்பியோடுகிறது. இதைக் கிரகிக்க அங்காதிபாத சாஸ்திரமும், பிராணிவர்க்க குணசாஸ்திரமும் நன்கு அறிதல்வேண்டும். இதனால் சிவம் சத்தி புணர்ச்சியால் எவ்விதத்திலும் குறைவு குற்றம் படாமை யறிபலாம்.

சூட்டையும் ஒளியையும்போல, அன்பும் ஞானமும் இரண்டு தனிப் பொருள்கள். அன்பு உணரப்படுவதுபோல், சூடு உணரப் படுகிறது. வெளிச்சமானது ஞானத்தைப்போல் பார்க்கப்படுகிறது. மனிதன் நினைக்கும்போது, ஞானம் பார்க்கப்படுகிறது. மனிதன் தொழில் படும்போது அன்பு உணரப்படுகிறது. ஏனென்றால் திருமாணம் ஆகும்போது இரண்டாக அல்லாமல் ஒன்றாக அவைகள் சேட்டிக்கின்றன. உலக சூரியனின் சூடும் வெளிச்சமும் இம்மாதிரியே தொழிற்படுகின்றன. வசந்த காலத்திலும், கோடை காலத்திலும் பயிர் செழிப்பும், தழைப்பும் உண்டாகி, சூடு ஒளியுடனும் ஒளி சூட்டினுடனும் ஒத்து வேலை செய்கின்றன. அப்படியே அன்பானது சாந்தமும் சமாதானமுமான நிலையில் ஞானத்தோடும், ஞானம் அன்போடும் ஒத்துழைத்து இரண்டும் உற்பத்திகள் செய்து உருவாக்குகின்

றன. இது கூட, இளஞ்சூலிலும் (Embryo) மனிதனிலும் ஒரே மாதிரி யிருக்கிறது. அன்பும் ஞானமும் ஒத்து உழைத்தல் சூடும் ஒளியும் ஒத்து உழைத்தல் போலிருக்கிறது. அவ்வாறே சிவமும் சத்தியும் ஒத்து உழைத்தலு மிருக்கின்றன. இவை ஞான லோகத் தோற்றங்களால் மிகவும் நன்றாய் விளங்குகின்றன.

மேலும் சரீரத்தில் மயிர் போன்ற நுட்பமான இரத்தக்குழாய்கள் (Capillaries), அவ்விதமான நுட்ப காற்று சிற்றறைகளை அடுத்தபோது அவைகளின் நுட்பமான போர்வைகளின் மூலமாய் இரத்தம் சுத்தி யடைதலும் சிவசத்தி புணர்ச்சிக்கு உதாரணமாகும். அவ்விரத்தக் குழாய்கள் காற்று சிற்றறைக்குள் பிரவேசியாமலே இரத்தம் சுத்தமாவது போல், சிவமும் சத்தியும் புணராமல் புணர்ந்து உலகுயிர் உண்டாகுதலால் பவன் பிரமசாரியும் சத்தி கன்னிகையுமாவார்கள். ஏக காலத்தில் அவைகள் ஒத்து ஒன்றாய் உழைத்தலே யன்றி வேறு யாதொன்றும் நடக்கவில்லை. சூக்குமப் பொருள்களையும் அதன் தொழிற்பாடுகளையும் விவரித்தல் மிகக் கடினம்.

## மதிப்புரைகள்

**The League of Non - Brahmin Youth—Diary for 1929** - இந்த டயரி மிக அழகாகவும் பல தலைவர்களின் அரிய சொற்களடங்கியும் உள்ளது. விலை குறிக்கப்படவில்லை. வேண்டுவோர் சோல்டன் கம்பெனியாருக்கும் திரு. சுரேந்திரநாத் ஆர்யா அவர்கட்கும் எழுதிப் பெற்றுக்கொள்ளலாம்.

**‘அருட்பிரகாசம்’ மலர் 2 இதழ் 9.** இதில் “திருவருட்செயல்” “ஷடாந்த சமரசம்” முதலிய பல அரிய கட்டுரைகள் மிக அருமையாக வெளிவந்துள்ளன. வேண்டுவோர் தி. கோ. வரதராஜர், தில்லையாடி தபால், மாயவரம் வழி என்ற விலாசத்துக்கு ஆண்டு சந்தா ரூ. 2—0—0 அனுப்பிப் பெறலாம்.

**“தெய்வீகன்” மாலை 1 மணி 6, 7.** இது மாதப் பத்திரிகை பார்க்கவ குலத்தினர் முன்னேற்றத்துக்காகப் பாடுபடுவது. திரு. ம. ரா. குமாரசுவாமிப் பிள்ளையவர்கள் மேல் பார்வையில் திரு. மே. வே. துரைசாமி உடையார் அவர்களை ஆசிரியராகக்கொண்டு நடக்கிறது. பல அரிய கட்டுரைகள் நல்ல தமிழில் எழுதப்பட்டுள்ளன. வேண்டுவோர் “தெய்வீகன், பொன்மலை, திருச்சி, என்ற விலாசத்துக் கெழுதுக.

**“ஞான அரசு” மலர் 1 இதழ் 1.** இந்த மாதப் பத்திரிகை சைவ சமயக்கொள்கைகளை நன்றாக எடுத்து விளக்குவதோடு பழமையின் சிறப்பையும் விளக்கும் மேன்மையுடையது. இளைஞருக்கும் பயன்படுமாறு தெளிவாக எழுதப்பட்டுள்ளது. வேண்டுவோர் பத்திராதிபர் வ. சி. தங்கவேல் பிள்ளை, பேட்டை, திருநெல்வேலி என்ற விலாசத்துக்கு ஆண்டுச் சந்தா ரூ. 1—0—0 அனுப்புக.

**“ஆநந்த போதினி”**—இம்மாதப் பத்திரிகை இப்போது ஒரு புதின வாரப் பத்திரிகையையும் வெளியிடத் தொடங்கி யிருக்கிறது. அறத் துறையிலும் சமயத் துறையிலும் நம் செந்தமிழ் நாட்டில் சில மாதங்களாக போதிக்கப்பட்டு வரும் கருத்துக்களை யாராய்ந்து அவைகள் சமூக நன்மைக்கும் நல்லொழுக்கத்துக்கும் தமிழர் முன்னேற்றத்துக்கும் எம்மட்டில் துணைபுரியும் எம்மட்டில் இடையூறிழைக்கும் என்பதைப் பல்லாயிரம் சந்தாதாரர்களையுடைய இப்பத்திரிகை அச்சமின்றி வெளியிடுமென்று எதிர்பார்க்கிறோம்.

**“ஜாதக கணிதம்”**—இது திரு. C. G. ராஜன், B. A. அவர்களால் எழுதப்பெற்ற அரியநூல். 274 பக்கமுடையது. விலை ரூபாய் இரண்டு. தமிழ்ப் பேரறிஞரால் எழுதப்பட்ட இந்நூலை தமிழ் மக்கள் வாங்கி யாதரிக்க வேண்டியது அவர்கள் முதற்கடன். வேண்டுவோர் 7, வேங்கடேச மேஸ்திரி தெரு, சௌகார்பேட்டை போஸ்ட் விலாசத்துக் கெழுதுக.

**‘வேளாள மித்திரன்’ மலர் 2, இதழ் 1.** இம்மாதப்பத்திரிகை வேளாளர் முன்னேற்றத்துக்காகப் பாடுபடுவது. திரு. C. K. சுப்ரமணிய முதலியார் முதலிய பேரறிவாளர் கட்டுரைகளை வெளியிடுவது. ஒவ்வொரு வேளாளரும் வாங்குதற்குரியது. வேண்டுவோர் M. A. பாலசுப்ரமண்யம், பத்திராசிரியர், ‘வேளாளமித்திரன்’ கோயமுத்தூர் என்ற விலாசத்துக்கு எழுதுக.

# உற்றார் யாருளர்?

[வேள் - N. துரைக்கண்ணன்]

உற்றார் யாருளர்? என்னுந் தலைப்பை இக்கட்டுரைக்குப் பொறித்துள்ளதைக் கண்ணுறும் அன்பர்கள் இறும்பூதெய்தலாம். அவ்வாறு வியப்புறுதற்குக் காரணமென்னை? இவ்வகன் ஞாலத்திலுள்ள மக்களாகிய நமக்கெல்லாம் உற்றார் (சுற்றத்தார்) பலரிருப்ப, உற்றார் யாருளர்? என்னும் கடாவெழின் வியப்புண்டாதல் இயல்பே யன்றோ? அதுபற்றிச் சிறிது ஆராய்வாம்.

மண்ணுலகில் நம்மை யீன்றெடுத்த நாள் முதல் நமக்கு யாதொரு தீங்கும் நேரா வண்ணம் காத்து, பால் நினைந்தூட்டி வளர்த்த அன்பு மிக்க அம்மை ஒருபுற மிருக்க, நாம் பச்சிளங் குழவியாயிருந்தது முதல் உணவு, உடைகளைக் கொடுத்து, தகுந்த பருவத்தில் மம்மர் அறுக்கும் கருவியாய கல்வியைக் கற்பிக்கச் செய்து, அறிவொழுக்கங்களில் தலைப்படச் செய்து, இக்கல்வியறிவொழுக்கங்களால் பெரியார்பலர் புகழுமாறு திகழ வைத்து, நாம் இல்வாழ்க்கையை மேற்கொள்ளத் துணைபுரியும் கற்புமிக்க மங்கையை மன்றல் செய்வித்து, இன்னும் நாம் வேண்டுவனவெல்லாம் முனியாது கொடுத்து மகிழச் செய்யும் தந்தையொரு மருங்கிருக்க, நம்மை யன்புடன் நேசிக்கும் நம்முடன் பிறந்த சகோதர சகோதரிகள் ஒருபுடை யிருக்க, நமக்குப் பொருட் பெருக்கத்தால் அறிவு கொளுவிய தேசிகர் ஒரு சாரிருக்க, இரவும் பகலும் நம் நலத்தையே நாடி நமக்கு வேண்டுவனவெல்லாங் குறிப்பறிந்து செய்து பேணி, நம்மை யின்பத்திலேயே திளைக்கச் செய்யும் பொங்குறு கவினுங் கற்பும் வாய்ந்திலங்கும் மனைவி யொருவயினிருக்க, நம் அன்பிற்கும் பொருளுக்கும் உரியவர்களாகிய அரும்பெறற் குமாரகுமரிகள் ஒருபால் இருக்க, நமக்கு இடுக்கணுற்றுழி மிக வருந்தி அதனை நீக்க முயன்றும், ஆக்கம் மிக்குழி அதற்கு உடனிருந்து மகிழ்ந்தும் நமக்குறுவன வெல்லாம் தமக்கு முறுவனவாக எண்ணி நேசிக்கும் நண்பர்கள் ஒருதலை யிருக்க, நமக்கு மிகவும் தொடர்புடையராய் நம்மினீங்காமல் சூழ்ந்திருக்கும், கிளைஞர் இருக்க, உற்றார் யாருளர்? என்னும் வினா வெழுந்தது சாலுமோ வெனின், நன்று கழறினீர்! நம் உற்றார் என்று நினைந்து அன்பு கொண்டு நேசிக்கும் தந்தை தாய் மனைவி மக்கள் மற்றுள சுற்றமெல்லாம் உண்மை யுறவினர்களா? நிலைபேறுற்ற உறவினர்களா? என்று ஆராய்ந்தால், நமக்கும் இவர்க்கும் உளதாகிய உறவு நீரிற்குமிழி போல நிலையில்லாததாகிய இவ்வுடம்பினால் ஆயதாகலான், இவ்யாக்கை யொழிய இதனாலாகிய உறவும் ஒழிதலைக் காண்கின்றோம். யாக்கையின் தொடர்ச்சி உள்ளபோதும், பான்மை கூட்டும் வழி இவர்கள் உறவாராகவும், பகைவராகவும் மாறுகின்றனர். ஆதலின் இன்னோரெல்லாம் உற்றாரல்லரெனத் தெளிக.

இங்ஙனம், நல்லூழ் உருத்து ஊட்டும் வழி இவ்வுறவினரல்லாத ஏனையோரும் உறவினராதலையும், தீயூழ் உருத்த ஞான்று இவ்வுறவினரே பகைவராதலையும் எடுத்துக் காட்ட பல சான்று வேண்டா! நாம் செல்வந்தராய ஞான்று

உறவினர், நொதுமலர் என்பவர்களே யன்றிப் பகைவர்களும் உறவராகின்றனர். நாம் வறியராய் நல்குரவால் நலியும் ஞான்று இதுகாறும் உறவினர் என்று சூழ்ந்துள்ளாரெல்லாம் நம்மை விட்டு நீங்குகின்றனர். அதுவொன்றோ, வெறுக்கின்றனர், வைகின்றனர்.

“ இல்லாரை யெல்லாரு மெள்ளுவர் செல்வ
யெல்லாருஞ் செய்வர் சிறப்பு ” [ரை

என்றும்,

“ கல்லானே யானாலுங்
கைப்பொரு ளொன்றுண்டாயின்
எல்லாருஞ் சென்றங்
கெதிர் கொள்வர்—இல்லானை
இல்லாளும் வேண்டாள்
மற்றீன்றெடுத்த தாய்வேண்டாள்
செல்லாதவன் வாயிற்
சொல் ”

என்றும் வரும் மெய்ம் மொழிகள் இவ்வியல்பைத் தெரித்தற்கன்றோ எழுந்தன.

“ அறஞ்சாரா நல்குர வீன்ற தாயானும்
பிறன்போல நோக்கப் படும் ”

என்ற தமிழ் மறையின் வண்ணம் யாது செய்யினும் உவக்கும் இயற்கையன்புடைய தாயும் நம்மைப் புறக்கணிப்பாளெனில், மற்றவரைப் பற்றிக் கூறுதலும் வேண்டுமோ ! எனவே பொருளுற்ற ஞான்று நம்மைச் சூழ்ந்து உறவு பாராட்டியது இவர்கள் தம்பயன் கருதி யன்றி நம் நலங்கருதி யன்றெனத் தெளிந்தாம். இவ்வித இயல்பினோர் நமக்கு உறவினராதல் யாங்ஙனம் ? ஆகவே இவர்கள் உறவெல்லாம் போலியுறவன்றி வேறென்னை ?

“ பற்றற்ற கண்ணும் பழைமை பாராட்டுதல்
சுற்றத்தார் கண்ணே யுள ”

என்று தெய்வப் புலமைத் திருவள்ளுவதேவர் சொற்ற வண்ணம், நிரப்புவந்துழியன்றி எக்காலத்தும் என்னுறினும் எள்ளாது உற்றார் நம் நலத்தையே நாடுவதாயினும், நம் இன்னுயிர் நீங்குங் காலத்து அவ்வுயிரை மீட்டுத் தந்து உதவும் உறவினர் ஒருவர் உளரோவென்று கூர்ந்து நோக்குமின்கள் அறிஞர்களே ! ஒருவருமில்லை என்க.

அற்றன்று ; காலனால் பற்றப்படும் உயிரை அவனிடமிருந்து மீட்கும் ஆற்றலுடையராயின் உற்றார் முன் வந்து முயன்று மீட்பர். அவ்வாறு இயலாததால் அவர்கள் என் செய்வர் பாவம் எனின், நன்று கூறினீர் ! உண்மையே ! நம் உயிர் போங்காலத்து நமக்கு மிக இனியார் - உறவினர் - எனத் தெளிந்தாரெல்லாரையும் விளித்து, “ உறவினர்களே ! எம் உயிர் இன்னும் சில கணத்தில் நீங்கப் போகின்றது. அவ்வாறு எம் உயிர் நீங்காது நிற்கவேண்டுமாயின், எம் உயிர்க்குப் பதிலாகப் பிறிதொருவர் உயிர் கொடுத்தல் வேண்டும். யாம் நுங்கட்கு வேண்டிய உதவிகளெல்லாம் செய்திருக்கிறேமல்லேமோ ! எம்முயிர்க்குப் பதிலாக உங்களிலொருவர் எவரேனும் உயிர் கொடுக்க முன் வருவீராயின் நலமாம்.” என்று கேட்போமாயின், நமக்காக வேண்டி உயிர் கொடுக்க முன் வருவார் எத்துணையர் ! என்று எண்ணுகிறீர்கள். நுனித்த மதிகொண்டு நோக்குமின்கள் அன்பர்களே ! “ அமரகத் தாற்றறுக்குங் கல்லாமா வன்ன ”ராய் ஒழிவர் என்றறிக. எனவே எவ்வகையான் ஆராய்ந்தாலும் இந்நிலவுலகில் நமக்கு உற்றார் ஒருவருமில்லை என்க.

இவ்வுண்மையை நாமெல்லாம் உணர்ந்து உய்தற்பொருட்டன்றே,

“ அத்தமும் வாழ்வும் அகத்துமட்டே
விழியம்பொழுக
மெத்திய மாதரும் வீதிமட்டே
விம்மிவிம்மியிரு
கைத்தலமேல் வைத்தழு மைந்தருஞ்
சுடுகாடுமட்டே ”

என்றும்,

“ அகமும் பொருளும் இல்லாளுஞ்
சுற்றமும் மைந்தரும்
வாழ்வும் எழிலுடம்பும் - எல்லாம்
வெளிமயக்கே ”

என்றும்,

“ ஊருஞ் சதமல்ல உற்றார்
சதமல்ல உற்றுப்பெற்ற
பேருஞ் சதமல்ல பெண்டீர்
சதமல்ல பிள்ளைகளுஞ்
சீருஞ் சதமல்ல செல்வஞ்
சதமல்ல தேசத்திலே
யாருஞ் சதமல்ல நின்றாள்
சதங்கச்சியே கம்பனே ”

என்றும் சிவஞானச் செல்வச் சிரேட்டர்களாகிய பட்டினத்தடிகள் அருளிச் செய்தனர்.

இனி, இங்ஙனம் இவர்களெல்லாம் நமக்கு உறவினரல்லையென அறிந்தோமாதலின், உண்மை உற்றார் யார் எனச் சிறிது நோக்குவாம்.

காரிட்ட ஆணவக் கருவறையில் கண்ணிலாக் குழவிபோல் முடமாய் அறிவுஞ் செயலும் நிகழ்தலின்றி இருந்த நம்மையெல்லாம் பேரருட் பெருக்கத்தால் எடுத்து அறிவுஞ் செயலும் நிகழ்தற்கேதுவாய யாக்கையைக் கொடுத்து, அவ்வித யாக்கைக்கு இன்றியமையாததாய உறுப்புகளை யளித்து, நாம் இருத்தற்கு இப்பெரும் வையத்தையீந்து, நாம் துய்ப்பனவும் உய்ப்பனவுமாய பொருள்களை யெல்லாங் கொடுத்து வாழ்ச்செய்து, நம்முடன் ஒன்றாயும் உடனாயும் வேறாயும் இருந்து நாம் வேண்டுவனவெல்லாம் அறிந்து உதவியருளும் செம்பொருளே நமக்கு உற்றான் என்க. அவ்விறைவனே நம்மையெக்காலத்தும் - கூற்றுவனால் பற்றப்படுங்காலத்தும் - கைவிடாது காத்தருளும் ஆற்றலுடையோன். அக்கடவுள் நித்தமானவன். தன் பயன்கருதி நமக்கு நலன் விளைப்பானல்லன். நாம் இனியன என்று எண்ணும் பொருள்களெல்லாவற்றிலும் இனியவன் என ஓர்ந்துணர்க.

“ புலனைந்தும் பொறிகலங்கி நெறிமயங்கி
யறிவழிந்திட்டை மேலுந்தி
யலமந்த போதாக
அஞ்சேலென வருவான் ”

—ஆளுடைய பிள்ளையார்.

“ உற்றாற் யாருளரோ உயிர்
கொண்டுபோம் பொழுது
குற்றாலத் துறைகூத்த னல்லால்
நமக்குற்றார் யாருளரோ ”

—தாண்டகச் சதுரர்.

“ மடித்தாடு மடிமக்க ளன்றியே
மனனேநீ வாழுநாளுந்
தடுத்தாட்டித் தருமனார் தமர்செக்கி
லிடும்போது தடுத்தாட் கொள்வான் ”

—தம்பிரான் தோழனார்.

என வரூஉம் அருண்மொழிகள் காலனால் அடரப்படும்போது நமக்கு உற்றானாய்ப் போந்து காத்தருள்பவன் பேரறிவுப் பிழம்பாகிய இறைவனே யென்று தெரித்தலைக் காண்க.

இனி, நமக்கு உற்றவனும் உறுதுணையுமா யிருப்பவன் கடவுள் என அறிந்தோம். அவ்விதம் அறிந்த நாம் செய்ய வேண்டுங் கடமை யாது? அவனையடைந்து - அவனருளைப் பற்றுக்கோடாகப்பற்றி - அடைக்கலம் புகுந்து எல்லாத் துன்பங்களினுந் தலையாயதாய மரணத் துன்பத்தை விலக்கிக் கொள்ளுதலொன்றே.

(5) சாதி வேற்றுமை பாராட்டாமை. எல்லாமக்களும் ஆண்டவன் அருளைப்பெற அமைந்தவர்கள் உயிர்களுக்கு அடிமைத்திறம் பேணும் உயரிய கடமை எம்மதமும், சம்மதமாகக் கொள்ளுதல். அன்பின் பெருக்கு கொல்லாமை, புலால் மறுத்தல், திருநீறணிதல், வேண்டுமேல் கண்மணி போற்றல், ஆலயவழிபாடு, திருமுறைகள் போற்றல்.

(6) பெரிதும் வேண்டப்படும்.

(7) பன்னிரு திருமுறைகளும், மெய்கண்ட நூல்களும்.

(8) தற்கால சரித சமய ஆராய்ச்சி வல்லார் கூறுபவைகளை மேற்போந்த இரு பெரும் நூல்களுக்கும் இணங்கக் கொள்ளுதல் வேண்டுதும். ஆராய்ச்சி வல்லார் கூறும் உண்மைகள் பன்னிருதிருமுறைகளுக்கும், மெய்கண்ட நூல்களுக்கும், மேலோங்கி இருக்குமாகில், அவைகளையும் ஒருவாறு ஒப்புக் கொள்ளுதல் வேண்டும்.

(9) உயிருள்ள ஏனைய சமயங்களின் அடிப்படையான கொள்கைகள் யாவும் சைவத்தில் விளங்குவது கண்கூடு. புறச்சமயம், புறப்புறச் சமயம், அகச்சமயம், அகப்புறச் சமயம் என்ற பிரிவுகளை ஒழித்து எல்லாச் சமயங்களையும், சகோதர சமயங்களாக எண்ணி, அவ்வச்சமயங்களிலுள்ள கொள்கைகளைச் சைவம் ஏற்றுக்கொள்ள வேண்டும்.' பிரமஞான சங்கத்தின் அமைப்புகளைப் போலவும், பிரமஞான சங்கம், எல்லாச் சமயத்தைச் சேர்ந்தவர்களையும் தங்கள் சமயங்களைப் புறக்கணிக்காமல், ஏற்றுக் கொள்ளுகிறதோ, சைவ சமயமும் அவ்வாறு ஏற்றுக்கொண்டு, பிறசமயங்களோடு, ஒத்துழைக்கலாம்.

(10) சைவ சமயத்தின் சமரசக் கொள்கைகளை அறியாமலும், அறிந்தாலும், சைவ சமயக் கொள்கைகளுக்கு இடர் வந்த காலத்துப் பிற சமயங்களைக் கண்டித்துச் சைவப் பெரியார்கள் எழுதிய கண்டன நூல்களுக்குப் பயந்துகொண்டும், காலத்தின் போக்கு அறியாமல், வாழும், கடுஞ்சைவர்களுக்குப் பயந்து கொண்டும், பொருளின்றியும், முயற்சி இன்றியும், வாளா கிடத்தலால், சைவ மக்களைப் பிற சமயங்களுக்கு விட்டு விட்டார்கள்.

(11) மிக மிக வேண்டப்படும்.

(12) சைவ சமயத்தை அமைப்புக்குட்படுத்தி, போதிய பிரசாரகர்களை நிறுவிப் பள்ளிக்கூடங்கள் அமைத்தல், ஏழை மக்கட்குப் பயன் கருதாத் தொண்டாற்றல், ஒவ்வோர் ஊரிலு மமைந்துள்ள ஆலயங்களில் குறிப்பிட்ட நேரத்தில் யாவரும் அமைதியாக அம்மை அப்பனை வணங்கல், தொழிற்சாலை நிறுவல், இன்னோரன்ன பிறதொண்டுகளால், சைவர்கள் தொகை சுருங்குவதைத் தடுக்கலாம்.

(13) தற்காலம் அது அவசியமில்லை. முயற்சி இருந்தால் ஒருவாறு செய்யலாம்.

(14)

(15) இருபத்தி ஐந்தாவதில் கண்ட வினவிற்குள்ள விடையில்.

(16) சைவ சமயத்தை நன்கு கற்றவர்களும், ஆராய்ச்சி வல்ல பெரியார்களும் கூட்டங்கூடி ஒற்றுமை உண்டாக்கத் தகுந்த வழிகளைக் கோலுதல் வேண்டும். சமயப் பெருநெறியில் ஒழுகும் மக்கள் யாவரும் மாறுபட்ட எண்ணங்கள் கொள்வது இயற்கையே. வேற்றுமையில் ஒற்றுமை காண்பதே முறை. இம்முறையில் ஒற்றுமை காண்பது முடியாததன்று. சைவசமயத்திற்கு ஒற்றுமை பெரிதும் வேண்டப்படும். இக்காலத்து அதற்குரிய பற்றை உண்டாக்கலாம். பற்றை ஓங்கச் செய்வதற்கு வழி சைவசமய அமைப்பிற்குத் தலைவராக வருவோரும், பிரசாரர்களும், ஒழுக்கம், இன்சொல், அன்பு, அருள், தியாகம் முதலிய குணங்களைக் கொண்டு ஒழுகுதல் வேண்டும்.

(17) ஒரு காலத்தில், சைவப் பெருநெறியில் ஒழுகிய மக்கள், ஒழுகாத மக்களைப் புறக்கணித்து வந்தார்கள். முன்னவர்களது, ஒழுக்கத்தையும், பிறவற்றையும், நோக்கிய மக்கள் தனி வகுப்பாகப் பிரித்து விட்டார்கள். நாள் செல்லச் செல்ல 'சைவர்' என்ற ஒரு வகுப்பார் ஏற்பட்டு விட்டார்கள். ஏனைய மக்கள் கலந்துகொள்ளாதவாறு அதற்குரிய முறைகளையும் கோலிக்கொண்டார்கள். இவற்றை ஒழித்துத் தற்காலம் சைவப் பெருநெறியில் ஒழுகும் மக்கள் யாவரும் சைவசமயத்தைச் சேர்ந்தவர்கள் என்ற முறை வகுத்தல் வேண்டும். ஒரு வகுப்பார்க்கே, சைவம் உரிமை யுடைத்தென் பதைக் கடியவேண்டும்.

(18) தற்கால ஆசாரச் சீர்திருத்தத்திற்கு, 'திருத்தொண்டர்' புராணம் உதவி செய்யவல்லது. வகுப்புப்பூசல் கனன்று எழுந்த காலத்துத் தோன்றியது இந்நூல். இந்நூலின் முறைப்படி நிகழ்காலத்தும், வருங் காலத்தும் சீர்திருத்தம் செய்து கொள்ளலாம்.

(19) தீண்டாத வகுப்பாரையும், சைவத்தில் சேர்த்துக்கொண்டு, பொது இடங்களிலும், ஆலய வழிபாட்டிலும் சைவர்களுக்குள்ள உரிமையிருத்தல் வேண்டும். மரங்களின் நிழலில் இறைவன் வணக்கம், தமிழ் நாட்டில் இருந்ததென்பது யாவரும் அறிந்ததே. அக்காலத்து எல்லா மக்களும் தடையின்றி வணங்கி வந்தார்கள். நம் நாட்டில் கோவில்கள் தோன்றின காலத்து இவ்வழக்கம் தொலைந்தது- ஆலயங்களை பொது இடமாக்கி, சைவ சமயத்தில் சேர்ந்த மக்கள் யாவரும் வழிபாடு செய்யத்தக்க உரிமை ஏற்படுத்தல் வேண்டும்.

(20) ......

(21) ......

(22) ......

(23) சேர்க்கலாம்.

(24) தற்காலம் வடநாட்டில், ஆரிய சமாஜத்தார் எம்முறையில் சேர்த்துக் கொள்ளுகிறார்களோ நாமும் அவ்வாறு செய்யலாம். ஆயினும் ஆரிய சமாஜத்தார் பூணூல் அணிவதைப் பிரதானமாகக் கொண்டுள்ளார்கள். கழுவாயும் செய்கிறார்கள். செலவு அதிகமாக ஆகிவிடுகின்றது. நாம் திருநீற்றைப் பிரதானமாகக் கொள்ளவேண்டும். ஐந்தெழுத் துண்மையை விளக்கல் வேண்டும். நம்முடன் ஆலயவழிபாடு செய்ய உரிமையிருந்தால் போதும்.

(25) இவ்வினாத்தான் தலையாயது, 14, 15, 20, 21, 22, 23 முதலிய வினாக்களுக்கு விடையாகக் கொள்ளவேண்டும். நமது சமாஜத்தை ஒரு கட்டுப்பாட்டிற்குள்ளதாய் அமைத்தல் வேண்டும்.

தலைமைச் சமாஜத்தைப் பின்பற்றி எண்ணில்லாத கிளைச்சமாஜங்கள் இருத்தல்வேண்டும்; கிராமங்களிலும், சமாஜம் நிறுவப்படல் வேண்டும். சைவ சமயத்தைச் சார்ந்த ஒவ்வொரு ஆணும் பெண்ணும் உறுப்பினராக இருத்தல் வேண்டும். கிராமச் சங்கங்களினின்றும், ஜில்லாச் சங்கங்களுக்கு உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கலாம். ஜில்லாச் சமாஜத்தினின்றும் தலைமைச் சமாஜத்திற்கு உறுப்பினர்கள் வரவேண்டும். அவ்வுறுப்பினர்களிலிருந்தும் தலைவர், உதவித் தலைவர் காரியதரிசி நிர்வாக அங்கத்தவர்கள் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும். ஒவ்வொரு கிராமச் சமாஜமும், இயன்றவரை, சைவப்பள்ளிக்கூடங்கள், ஏழை மக்களுக்குத் தொண்டு செய்தல் முதலியவைகளைப் பற்றி வேலை செய்தல்வேண்டும். ஒவ்வொரு வாரமும், வேலையைப்பற்றிக் குறிப்பிட்டு, ஜில்லாச் சமாஜத்திற்கும், தலைமைச் சமாஜத்திற்கும் அறிக்கை அனுப்புதல்வேண்டும். கிராமச் சங்கங்களின் உறுப்பினர்கள் நான்கு அணா சந்தாச் செலுத்தி சந்தாவைத் தலைமைச் சமாஜத்திற்கு அனுப்பவேண்டும். தலைமைச் சமாஜத்தார் வேலைகளைக் குறிப்பிட்டுத் தணிக்கை செய்து, கிராமச் சமாஜங்களை, ஊக்கலாம். சமாஜத்தைக் கட்டுப் பாடாகவும் ஒழுங்காகவும் நிறுவியபின்னர் கோயில்கள் மடங்கள் சைவத்திருக்கூட்டங்கள் ஆகிய இவற்றைப் பயன்படுத்தற்குரிய வழிகளை யோசித்தல் வேண்டும். தற்கால நிலையில் மேற்போந்தவற்றில்

சமாஜம் புகுமேல் குழப்பமே தலை காட்டும். மடங்கள், வழி வழியாக ஒரு வகுப்பார்க்கே உரிமையாக இருந்து வருகிறது. கோயில்களும் சைவசமயத்தின் இயல்பு அறியா மக்களிடத்து இருந்து வருகின்றன. திருக்கூட்டங்களும், 'தாழ்மை' யெனும், சைவப் பெருங்கொள்கையை ஒழித்து, தற்செருக்கு கொண்டுள்ளது இவற்றையெல்லாம் கைப்பற்ற வேண்டுமானால் சமாஜங்கள் அதிக ஆற்றல் பெற்றிருக்க வேண்டும். ஆலயமட பரிபாலனத்திலும் உற்சவ முறைகளிலும் சீர்திருத்தம், செய்வதைப்பற்றி வழிகள் இவையெனக் கோல வேண்டுவதில்லை. அச்சிலும் பேச்சிலும் பயன் யாது? சமாஜத்தை வலுவடையச் செய்யவேண்டுமென்றால் தற்காலம் நமது நாட்டில், அருகிக் காணப்படும் சைவசபைகள், சன்மார்க்க சபைகள் யாவற்றையும் சைவசித்தாந்த சமாஜமாக மாற்றுதல் வேண்டும். சித்தாந்தப் பத்திரிகையை வாரப் பதிப்பாக மாற்றி, ஒவ்வொரு நகரங்களிலும், பொறுப்பு வாய்ந்த நிருபர்களை நியமித்து ஆண்டாண்டு நடைபெறும் விரிவுரைகளை வெளியிட வேண்டும். இக்காரியங்கட் கெல்லாம் பொருள் வேண்டுமே! யாது செய்வது? கோயில்கள் வேத பாடசாலை முதலியவைகளை நிறுவும், வணிகப் பெரு மக்களிடத்தில் முறையிட்டு ஈட்டவேண்டும். சைவப் பெரு நெறியில் ஒழுகும் மக்கள் யாவரும் பொருளுதவி செய்ய வேண்டும். கோயில்களையும் மடங்களையும் கைப்பற்றும் வரையில் சமாஜம் நன்கு நடைபெற ஏராளமான பொருள் வேண்டி யிருக்கும். இவைகளை யெல்லாம் நன்கு யோசித்து சைவப் பெருநெறி உலகெலாமோங்க அம்மையப்பன் பொன்னடியைப் போற்றி வேலைத் திட்டம் செப்பனிடுவோமாக.

[குறிப்பு:—சைவ இளைஞர் ஒருவர் இவ்வாறு விடைகள் அனுப்பியது பேருவகையைத் தருகிறது. இவரைப் போன்ற ஊக்கமுடைய இளைஞரைப் போன்ற சிலரைக் கொண்டே நம் நாடு முன்னேற்ற மடையும் என்பதில் சிறிதும் ஐயமில்லை.—பத்திராசிரியர்.]

## பிரிவாற்றாமை

நம் சமாஜத்திய 24-வது ஆண்டுத் தலைவராகிய சைவத் திருவாளர் திவான்பகதூர் ஸர் T. N. சிவஞானம் பிள்ளையவர்கள் தமது வாழ்க்கைத் துணைநலத்தை இழந்த செய்தி கேட்டுப் பெரிதும் வருந்துகிறோம். சமாஜத்தின் அநுதாபமும் தேறுதல் மொழிகளும் நம் தலைவருக்குப் போதிய சக்தியைத் தருமாறு கடவுளை வேண்டுகிறோம்.

18/129

# மதிப்புரைகள்

**அஷ்டப் பிரகரணம், சிவார்ச்சனா சந்திரிகை, சைவ பூஷணம், சைவ சிந்தாந்த பரிபாஷை**:—இந்நான்கு புத்தகங்களும் எமது பார்வைக்கு வந்தன. அஷ்டப்பிரகரணம் என்ற நூலில் தத்துவப் பிரகாசிகை, தத்துவ சங்கிரகம், தத்துவத்திரய நிர்ணயம், இரத்தினத் திரயம், போககாரிகை, நாதகாரிகை, மோக்ஷகாரிகை, பரமோக்ஷ நிராசகாரிகை ஆகிய எட்டு நூல்கள் விரிவான தமிழ் உரையுடன் அடங்கியுள்ளன. சிவார்ச்சனா சந்திரிகை என்பது ஸ்ரீ அப்பைய தீக்ஷிதரவர்கள் இயற்றிய நூல். இதற்கும் அரிய தமிழுரை சேர்ந்திருக்கிறது. காஞ்சி பஞ்சாக்ஷர யோகிகள் இயற்றியது சைவ பூஷணம். சூர்ய சிவாசாரியர் இயற்றியது சைவ சித்தாந்த பரிபாஷை. இவைகட்கும் தமிழுரை யாவரும் உணரும்படி எழுதப்பட்டிருக்கிறது. இந்நான்கு புத்தகங்களும் சைவக் கொள்கைகளையும் சிவபூஜை முறை நுட்பங்களையும் மிக நன்றாக எடுத்து விளக்குகின்றன. இவைகளை நன்றாகப் பயின்ற பிறகே சிவாநுபூதி கை கூடும். பழைய முறையிற் சைவப்பற்றுடையாரே யன்றி சீர்திருத்தக் கூக்குரலிடுவோரும் இந்நூல்களைப் பயிலுதல் பெருநன்மை தரும் வேண்டுவோர் "சிவாகம சித்தாந்த பரிபாலன சங்கம்" தேவகோட்டை என்ற விலாசத்துக்கு எழுதுக. இவைகளின் விலை முறையே ரூ. 3, 1½. 1, ½.

**"முன்னேற்றம்"**—இவ்வாரப் பத்திரிகை சிங்கப்பூரிலிருந்து வெளியாகிறது. சுயமரியாதை இயக்கத்தை மலாய் நாட்டில் பரப்பும் நோக்கமுடையது.

**"ஜகன்மோஹினி"**—இம்மாதப் பத்திரிகையில் பல நாவல்கள் தொடர்ச்சியாய் வெளியாகின்றன. ஆசிரியர் வை. மு. கோதைநாயகி யம்மையார். விலாசம்:—2, தேரடித் தெரு, திருவல்லிக்கேணி, சென்னை. வருட சந்தா ரூ. 1½.

**"வேளாள வாலிபன்"**—இது மாதம் இருமுறை வெளியாகும் பத்திரிகை. வேளாள இளைஞர்கள் முன்னேற்றத்துக்கான பொருள்களை நன்றாக எடுத்துரைக்கும் தொண்டு புரிவது போற்றத்தக்கது. ஆசிரியர் திரு. K. P. கிருஷ்ணசாமி கவுண்டர், குள்ளாயிபாளையம் கோயமுத்தூர். வருட சந்தா ரூபா 3.

**"பாரதி"**—இது புதியதொரு தேசீய மாதப்பத்திரிகை. அருமையான பல கட்டுரைகள் தமிழில் நல்ல முறையில் எழுதப்பட்டுள்ளன. வருட சந்தா ரூபா 2. வேண்டுவோர் 'பாரதி' ஆபீசு, உத்தமபாளையம், மதுரை ஜில்லா என்று எழுதுக.

**குறிப்பு**:—கோடை விடுமுறைக்கு வெளியூர் செல்வோர் புதிய விலாசங்களை உடனே நமக்கு அனுப்பவேண்டும்.


## முருகவேள் பனுவல் திரட்டு

சுப்பிரமணிய பக்தர்கள் பாராயணஞ் செய்தற்குரிய

சிறந்த நூல்

இதில், திருப்புகழ், கந்தரலங்காரம், கந்தரனுபூதி, கந்தரந்தாதி, கந்தர் கலி வெண்பா, கந்தர்சஷ்டி கவசம், திருமுருகாற்றுப்படை, முத்துக்குமாரசுவாமி பிள்ளைத் தமிழ், திருப்போரூர் சந்நிதிமுறை, திருத்தணிகை சந்நிதிமுறை, கந்த புராணம், தணிகைப் புராணம், திருச்செந்தூர்ப் புராணம் முதலிய நூல்கள் அடங்கியிக்கின்றன. இரண்டாம் பதிப்பு. இப்பதிப்பில் முன்னினும் பாக்கள் அதிகமாகச் சேர்க்கப்பட்டிருக்கின்றன.

விலை ரூபா 1.

முருகவேள் புத்தகசாலை,
இராயப்பேட்டை, சென்னை.

# சித்தாந்தம் — ஓர் உயர்ந்த மாதத் தமிழ்ப் பத்திரிகை

சந்தா விவரம்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| ஆண்டு 1-க்கு தபாற்கூலி யுட்பட | உள் நாடு (இந்தியா, பர்மா, சிலோன்).... | ரூ. | 1 | 8 | 0 |
| | வெளி நாடு .... .... | ,, | 2 | 0 | 0 |

மலர் க - அழகான முழுகலிக்கோ பயிண்டு செய்தது ரூ. 2-0-0. (தபால்கூலி பிரத்தியேகம்.)

குறிப்பு :—ஓராண்டிற்குக் குறைந்த சந்தா கிடையாது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| விளம்பர விகிதம் | முழுப் பக்கம் | ரூ. | 10 | 0 | 0 |
| | அரைப் பக்கம் | ,, | 5 | 0 | 0 |
| | கால் பக்கம் | ,, | 3 | 0 | 0 |

சித்தாந்தம் ஆபீஸ்,
88, திருப்பள்ளி தெரு, ஜார்ஜடவுன், சென்னை.



## குமரன் வாரப்பதிப்பு

சமாசாரப் பத்திரிகைகளினால் அறிய வேண்டிய எல்லா விஷயங்களும், அரிய கட்டுரைகளும், வியாபார விஷயங்களும், மற்றும் பல விஷயங்களும் வெளி வருகின்றன.

வருடச் சந்தா உள்நாடு ரூ. ௫—௦—௦
,, வெளிநாடு ரூ. சூ—௦—௦
தனிப்பிரதி ரூ. ப—க—சூ

## குமரன் மாதப்பதிப்பு

இது தமிழ்ச் சுவை யறிவார்க்குத் தேனென இனிக்கும் ஓர் இனிய மாதப் பத்திரிகை. ஏனையோர்க்கும் விளங்கக் கூடிய பல கட்டுரைகளும் விநோதப் பகுதிகளும் வெளிவருகின்றன.

வருடச் சந்தா உள்நாடு ரூ. க—அ—௦
,, வெளிநாடு ரூ. உ—௦—௦
தனிப்பிரதி ரூ. ௦—உ—௦

எப்பொழுது சேர்ந்தாலும் தை மாத முதலே கணக்கு வைக்கப்பெறும்.

மானேஜர்,
Ex. குமரன் ஆபீஸ், காரைக்குடி.

## செங்குந்த மித்திரன்

தென்னிந்திய செங்குந்த மகாஜனசங்க மாத வெளியீடு

ஆசிரியர் : ம. சண்முக சுந்தர முதலியார், எம். ஏ. எல். டி.

இது உண்மைச் செங்குந்தர்கள் முன்னேற்றமடையும் வண்ணம் வெளிவரும் ஒரு மாதப் பத்திரிகை. இதில் செங்குந்தர்களின் பண்டைப் புகழைப் பற்றிய ஆராய்ச்சிக் குறிப்புகளும், குல திலகர் சரித்திரங்களும், விரதாதி பண்டிகைகளின் ஐதீகங்களும் வெளிவருகின்றன. இதை ஒவ்வொரு செங்குந்தரும் ஆதரிக்கக் கடமைப் பட்டிருக்கிறார்.

| தபாற்கூலி உட்பட வருஷ சந்தா | ரூ. | அ. | பை. |
|---|---|---|---|
| இந்தியா, இலங்கை, பர்மா முதலிய இடங்கட்கு | 1 | 8 | 0 |
| பினங்கு, சிங்கப்பூர், ஆப்பிரிகா முதலிய இடங்கட்கு | 2 | 0 | 0 |
| தனி சஞ்சிகை | 0 | 2 | 6 |

"செங்குந்த மித்திரன்" ஆபீஸ்,
நெ. 31, அரண்மனைக்காரன் தெரு,
Ex. சென்னை.

## திருக்குறள் விளக்கம்

இந்நூற்கண் திருவள்ளுவர் திருக்குறள் மூலமும், பரிமேலழகர் உரையும், விளக்கமும் சேர்ந்திருக்கின்றன. இவ்விளக்கவுரை ஆசிரியர் மாணாக்கர்க்கு அறிவுறுத்துவது போல வரையப்பட்டிருக்கிறது. திருக்குறள் பயில்வோர்க்கு இப்பதிப்புப் பெருந்துணை செய்யுமென்பதில் ஐயமில்லை. நல்ல காகிதத்தில் அழகுபெற அச்சிடப் பட்டுளது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| அறத்துப்பால் கலிகோ பயிண்டு | விலை ரூபா | 3 | 4 | 0 |
| பொருட்பால் ,, | ,, | 4 | 8 | 0 |
| காமத்துப்பால் ,, | ,, | 1 | 12 | 0 |

பண்டிட் - K. குப்புச்சாமி முதலியார்,
திருக்குறள் விளக்க ஆசிரியர்,
3/2, பிள்ளையார்கோவில் தெரு, கிருஷ்ணாம்பேட்டை, திருவல்லிக்கேணி.



Printed at the Sadhu Press, 12, Ganapathi Mudali Street, Royapettah and Published by M. Balasubramania Mudaliar (Editor-in-charge) for the Saiva Siddhanta Maha Samajam, 150, Govindappa Naicken Street, G. T. Madras.